# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே






புதன்கிழமை 10.11.2021 supeedsam.com supeedsam@gmail.com


# இயற்கையின் கோர தாண்டவம் 15 பேர் பலி; 28,263 பேர் பாதிப்பு







(ராஜ்)

நாட்டில், கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம், மின்னல் மற்றும் காற்றுடன் கூடிய சீரற்ற வானிநிலை காரணமாக இதுவரை 15 பேர் உயிரிழந்துள்ளதுடன், 1% மாவட்டங்களிலுள்ள %,529 குடும்பங்களைச் சேர்ந்த 28,263 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என, அனர்த்த முகாமைத்துவ நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

02 ஆம் பக்கத்தில்...

## வீட்டின் மீது மண்மேடு சரிந்ததில் ஒரே குடும்பத்தில் மூவர் பலி





(க.கிஷாந்தன்)

கேகாலை ரம்புக்கன்ன பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்து கேகாலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாயும், 8 மற்றும் 14 வயதான அவரது இரு மகள்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

தந்தை காயமடைந்து கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

## 3 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

கேகாலை, குருநாகல் மற்றும் கண்டி மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம், மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பதுளை, கம்பஹா, கொழும்பு, நுவரெலியா, இரத்தினபுரி, மாத்தளை, களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களுக்கு செம்மஞ்சள் மற்றும் மஞ்சள் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

## மழை வெள்ளத்தில் மிதக்கும் நகரங்கள்

நாட்டில் சீரற்ற கால நிலையால் பெய்துவரும் அடை மழை காரணமாக, கேகாலை மாவட்டம் ரம்புக்கனை பகுதியிலும், குருணாகல் மாவட்டம் அலவ்வ பொலிஸ் பிரிவிலும் இரு வீடுகள் மீது மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

இரு சிறுமிகள், ஒரு யுவதி உள்ளிட்ட 4 பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## யாழ்.,கிளிநொச்சி,மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(ஜுட்)

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று (10) புதன்கிழமை விடுமுறை வழங்கப்படுவதாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் அறிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## வானிலை அவதான நிலையம் விடுத்துள்ள முக்கிய அறிவித்தல்!!



(படுவான்பாலகன்)

தற்போதுள்ள காலநிலை சில நாட்களுக்கு நீடிக்கும் எனவும் கரையோரப்பகுதிகளில் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறும் இடிமின்னல்

02 ஆம் பக்கத்தில்...

## கல்குடாவிலும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில்



(நமது நிருபர்)

நேற்று நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களின் எதிர்ப்பு தினத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் அதிபர் ஆசிரியர்கள் கூட்டணியுடன் இணைந்து நடாத்திய எதிர்ப்பு கவனயீர்ப்புப் போராட்டத்தில் கல்குடா

02 ஆம் பக்கத்தில்...

## திருகோணமலை கல்வி வலய ஆசிரியர்கள் போராட்டத்தில்



(கதிரவன்)

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் நேற்று மதியம் நாடெங்கும் வலய கல்வி அலுவலகங்கள் முன்னால் எதிர்ப்பு

02 ஆம் பக்கத்தில்...

## வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் தான் உலக நாடுகள் இலங்கையை கைவிட்டுள்ளன

இலங்கையின் ஜனாதிபதிகள் மற்றும் அரச தலைவா்கள் வெளிநாடுகளுக்கு வழங்கிய உறுதிமொழிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. எனவேதான், அபிவிருத்தி அடைந்த நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வருவதில்லை என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினா் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.


இனப்பிரச்சனை தொடா்பாக நாட்டின் முன்னைய தலைவா்கள், உறுதிமொழிகளை வழங்கினா். எனினும் அது எதுவுமே நிறைவேற்றப்படவில்லை என்றும் அவா் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய அவா்,

02 ஆம் பக்கத்தில்...

## கடந்த ஒருவருடமாக எதையும் செய்யாத அமைச்சர்

### சபையில் சுட்டிக்காட்டிய சாணக்கியன்



வாழைச்சேனை துறைமுகத்தினை விரிவுபடுத்துகின்றோம் என்ற பெயரிலே மணல் அகழ்வில் ஈடுபடுகின்றமை காரணமாக நாசவன் தீவு பகுதியிலுள்ள மக்களுக்கு குடிநீர் இல்லாத பிரச்சனை உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் (செவ்வாய்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு.மாவட்டத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வேலை நிறுத்தம்


### கொரோனா டெங்கு பணிகள் ஸ்தம்பிதம்

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார உத்தியோகத்தர் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள வேலை நிறுத்தத்தில் மட்டக்களப்பு மாவட்ட பொது சுகாதார பரிசோதகர்களும் இணைந்துள்ளனர்.

இதனால் இம் மாவட்டத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் அலுவலகங்கள் யாவும் முற்றாக மூடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளிலும் சுமார் 72 பொதுச் சுகாதார பரிசோதகர்கள்



கடமை புரிகின்றனர்.

பொதுச் சுகாதார பரிசோதகர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக

02 ஆம் பக்கத்தில்...



மட்டக்களப்பு மாவட்டத்தில் திங்கட்கிழமை விவசாயிகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படம்.










## கல்குடாவிலும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில்

கல்வி வலயத்தில் நூற்றுக்கும் அதிகமான ஆசிரியர் அதிபர்கள் கலந்து கொண்டது டன் இக் கவனயீர்ப்பு போராட்டமானது வாழைச்சேனை சந்தியில் இருந்து தொடங்கி கல்குடா வலயக்கல்வி அலுவலகம் வரை பேரணியாக சென்றது .

இதில் மட்டக்களப்பு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் பொன்னுத்துரை உதய ரூபன் அவர்களும் கலந்து கொண்டதுடன் கல்குடா வலயக் கல்வி அதிபர்கள் ஆசிரியர் களும் கலந்து கொண்டனர்.

மேலும் இதில் பின்வரும் சுலோகங்க ளும் வாசிக்கப்பட்டது அதிபர் ஆசிரியர் களின் 24 வருட சம்பள முரண்பாட்டை நீக்கு ,சுபோதினி திட்டத்தை அமல்படுத் து,தரமான கல்விக்கு வளங்களை வழங்கு ,மொத்த தேசிய வருமானத்தில் கல்விக்கு 67 வீத்தை ஒதுக்கு ,இலவச கல்வியை தனியார் மயமாக்காதே போன்ற வாசகங்களை அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்திய வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## மட்டு.மாவட்டத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வேலை நிறுத்தம்

கொரோனா தடுப்பு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் உட்பட கொரோனா விழிப்பட்டல் மற்றும் டெங்கு ஒழிப்பு நடடிவடிக்கைகளும் மாவட்டத்தில் ஸ்தம் பதடைந்துள்ளன.

வேலை நிறுத்தப் போராட்டம் காரண மாக இம்மாவட்டத்தில் அன்டிஜன் மற்றும் பீசீஆர் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட் டுள்ளன.

இதே வேளை மாவட்டத்தில் ஏனைய சுகாதார ஊழியர்களும் பணி பகிஸ்கரிப்பில் ஈடு பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை கல்வி வலய ஆசிரியர்கள் போராட்டத்தில்

நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

திருகோணமலை கல்வி வலய ஆசிரியர் கள் தமது சம்பள நிலுவை கோரி அரசுக்கு அழுத்தம் கொடுக்க போராட்டத்தில் ஈடுபட் டார்கள். கடற்படை தள வீதியில் அமைந்துள் சிறி கோணேஸ்வரா இந்துக்கல்லூரி முன் கூடிய இவர்கள் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அதன்பின்னர் அங்கிருந்து பிரதான பஸ் நிலையம் வரை ஊர்வலமாக சென்று அங்கும் கவனயீர்ப்பில் ஈடுபட்டார் கள். பிற்பகல் 2.15 மணிக்கு ஆரம்பித்த போராட்டம் 3.00 மணிவரை நீடித்தது.

## வானிலை அவதான நிலையம் விடுத்துள்ள முக்கிய அறிவித்தல்!

தாக்கங்களிலிருந்து அவதானமாக இருக் குமாறும் வானிலை அவதான நிலையம் எச் சரித்துள்ளது.

புத்தளம் தொடக்கம் அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்பில் காற்றின் வேகம் 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வரையில் காணப் படும் என வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட அதிகாரி ரமேஸ் சுப்ரமணியம் தெரிவித்தார். நாட்டின் பெரும் பாலான பகுதிகளில் பலத்த மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளது. வடக்கு, வடமேல், மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரேலியா மாவட்டங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான மிக பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் மாத்தளை, பொலநறுவை, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழைபெய்யும் சந்தர்ப்பத்தில் பலத்த காற்றும் வீசும். இடிமின்னல் தாக்கங்களிலிருந்து அவதா னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தென்கிழக்கு வங்களா விரிகுடாவில் அடுத்த 24 மணித்தியாலத்தில் குறைந்த காற் றளுத்த தாழ்வு பிரதேசம் வலுவடையக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மீனவர்களும் கடலில் பயணம் செய்வோரும் பயணம் செய்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்றார்.

## வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் தான் உலக

நாடு இன்று பாரிய பிரச்சனைகளுக்கு முகங் கொடுத்துள்ள நிலையில் பருவநிலை மாநாட் டுக்கு சென்றிருந்த இலங்கையின் ஜனாதிபதி, சேதனப்பசளைகளை பயன்படுத்தி இயற்கை விவசாயத்தை நடைமுறைப்படுத்தும் முதல் நாடாக இலங்கையை மாற்றப்போவதாக தெரி வித்திருந்தார்.

எனினும் இயற்கை விவசாயத்தை இலங் கையில் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்று அனைவருக்கும் தொியும். எனவே இது உண்மையில் கேலிக்குரிய விட யமாக உள்ளதாக சாணக்கியன் குறிப்பிட்டார்.

கொள்கை ரீதியான செயற்பாடுகள் தொடா ்பில் அண்மையில் ஜனாதிபதி கழுத்தை பிடிப் பது குறித்த கருத்தை வெளியிட்டிருந்தார்.

எனினும் இலங்கை மக்கள் இறுதியாக இந்த அரசாங்கத்தை கழுத்தை பிடித்து அனுப்பி வைக்கப்போவதாக சாணக்கியன் குறிப்பிட்டார்.

ஏனெனில் பசளை பற்றாக்குறை காரண மாக விவசாயிகள் மாத்திரமன்றி, பொது மக்களும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனா ். எனவே அவா ்கள், இறுதியில் அரசாங்கத்தை கழுத்தை பிடித்து வெளியில் தள்ளுவா ் என்று நாடாளுமன்ற உறுப்பினா ் கூறினார்.

இலங்கையில் தற்போதைய நிலையில் டொலா ் இருப்பு 2 பில்லியன் அளவிலேயே உள்ளது. எனவே எதிர்காலத்தில் இறக்குமதி களில் பாரிய பிரச்சனை ஏற்படும். இலங்கை யில் டொலர் பிரச்சினை, பசளைப்பிரச்சினை தொடா ்கின்ற நிலையில் அடுத்து எரிபொருள் பிரச்சினை எதிர்பார்க்கப்படுகிறது. இதன் போது எரிபொருளுக்கும் கறுப்புச்சந்தை உருவாக்கப்படலாம் என்றும் சாணக்கியன் குறிப்பிட்டார்.

நாட்டின் இயற்கை விவசாயத்தை நடை முறைப்படுத்தும்போது நட்டம் ஏற்பட்டால் நட்டஈட்டை தருவதாக மட்டக்களப்பில் சிலர் கூறியுள்ளனா ்.

இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்த நட்டஈடு, மெதமுலன்ன அல்லது ராஜபக்சர்க ளிடம் இருந்து தரப்படப்போவதில்லை.

நாட்டின் வரி செலுத்துவோரின் பணமே நட்டஈடாக தரப்படப்போகிறது என்று சாணக் கியன் குறிப்பிட்டார்.

இந்த சூழ்நிலையில் இலங்கையில் உணவு தட்டுப்பாடு ஏற்படுவதை தடுக்கமுடியாது என்று நிபுணா ் கூறியுள்ளதாகவும் அவா ் தெரி வித்தார். அத்துடன் வங்கிமுறையில் பிரச்ச னை ஏற்படும் என்றும் அவா ் தெரிவித்தார்.

ஒரே நாடு ஒரு சட்டம் தொடா ்பில் கருத்து ரைத்த அவா ்,

பொதுமகனை தாக்கியதாக குற்றம் சுமத்தப் பட்ட மட்டக்களப்பு காவல்துறை உறுப்பினா ் ஒருவா ் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

எனினும் சப்ரகமுவயில் பொதுமகனை தாக்கிய அதிகாரிக்கு இடமாற்றம் வழங்கப் பட்டது. இதுவே நாட்டில் இருக்கின்ற ஒரே நாடு ஒரே சட்டமாகும் என்று சாணக்கியன் குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து கருத் துரைத்த அவா ், தமிழ் இளைஞா ்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அதேநேரம் உயித்த ஞாயிறு தாக்குதல் தொடா ்பில் சந்தேகத்தில் பல முஸ்லிம் இளை ஞா ்கள் கைது செய்யப்பட்டுள்ளனா ். எனி னும் அது தொடா ்பில் எந்தவொரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரும் கேள்வி எழுப்பு வதில்லை என்றும் சாணக்கியன் தெரிவித்தார்.

## இயற்கையின் கோர தாண்டவம் 15 பேர் பலி; 28,263 பேர் பாதிப்பு

நீரில் மூழ்கி 9 பேரும் மண்சரிவு காரணமாக 4 பேரும் மின்னல் தாக்கத்தால் 2 பேரும் உயி ரிழந்துள்ளனர் என அந்த நிலையம் தெரிவித் துள்ளது.

இடம்பெயர்ந்த 4%0 குடும்பங்களைச் சே ர்ந்த 1,688 பேர் பாதுகாப்பான தங்குமிடங்க ளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் (ஊடக) பிரதீப் கொடிப் பிலி தெரிவித்தார்.

பதுளை, நுவரெலியா, மாத்தளை, கண்டி, முல்லைத்தீவு, கொழும்பு, திருகோணமலை, மன்னார், இரத்தினபுரி, களுத்துறை, புத்தளம், அநுராதபுரம், யாழ்ப்பாணம், காலி, கேகா லை, கிளிநொச்சி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களே அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 3,501 குடும்பங்க ளைச் சேர்ந்த 12,530 பேர் பாதிக்கப்பட்டுள்ள துடன், அந்த மாவட்டங்களில் 13 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. மேலும் 802 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மஹா ஓயா பெருக்கெடுத்து ஒடுவதால், குருநாகல் மாவட்டத்தின் பொல்கஹா வெல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பல தாழ்வான பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக பிரதீப் கொடிப்பிலி தெரி வித்தார்.

மேலும், களுகங்கை மில்லகந்த பகுதியி லும், ஜின் கங்கை பத்தேகம பகுதியிலும், நில்வள கங்கை தல்கஹகொட பகுதியிலும், அத்தனகல ஓயா துனமலை பகுதியிலும் பெருக்கெடுத்து ஓடுவதாக தெரிவிக்கப்படு கிறது.

மாவட்ட செயலாளர்களின் உதவியுடன் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஏதேனும் அவசரநிலை ஏற்பட் டால், 11% என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை தொடர்பு கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடும் மழை காரணமாக கற்பிட்டி, பாலாவி பிரதேசத்தில் நள்ளிரவு வேளையில் சிக்கித் தவித்த 71 பேரை கடற்ப டையினர் மீட்டுள்ளனர்.







**தலவாக்கலை பி.கேதீஸ்**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண் டமானின் பிறந்த தினத்தையொட்டி ( 9 ) நேற்று பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய் யப்பட்டு இருந்தன.அந்த வகையில் பொருளாதார ரீதியில் பின்தங்கியிருக்கும் தெரிவு செய்யப்பட்ட 25 பாடசாலை மாணவர்களுக்கு அவர்களது கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக புலமைப்பரிசில் (காசோலை) மற்றும் புத்தகப்பை, பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.மேலும் கொத்மலை பிரதேச ச பைக்கு உட்பட்ட பகுதிகளில் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக இயந்திரம் பழுது பார்க்கும் இளைஞர்களுக்கு அவர்களுக்கான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. அத்தோடு அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு நோர்வூட் சமுர்த்தி வங்கி ஏற்பாடு செய் யபட்ட சுயதொழில் மேற்கொள்ளவிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு உபகரணங்களும் ,தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் மற்றும் அம்பகமுவ பிரதேச செயலாளர் ,இலங்கை தொழிலாளர் காங்கி ரஸின் உபதலைவர்களான ஏ.பி சத்திவேல் ,கணபதி கணகராஜ் ,எ.பிலிப்குமார் பிரதேச சபை தலைவர்கள் ,உறுப்பினர்கள் இ.தொ.காவின் முக்கியஸ்த்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர்.

## கடந்த ஒருவருடமாக எதையும் செய்யாத அமைச்சர்

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், உண்மையிலேயே எனது கேள்விக்கான பதிலினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்குவார் என எதிர்பார்த்திருந்தேன். இதுவே முதல் தடவை இராஜாங்க அமைச்சர் எனது கேள்விக்கு பதில் வழங்கியிருக்கின் றார்.

நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடமும் 2 மாதங்களும் கடந்துள்ள நிலையி லும், நான் மீன்பிடி அமைச்சரிடம் ஐந்து, ஆறு கேள்விகள் கேட்டுள்ளேன்.

விசேடமாக பால்சேனையிலுள்ள மீன்பிடி துறைமுகம் குறித்து மற்றும் மீனவர்களுக்கான பாலம் அமைக்கவுள்ளமை குறித்து, அதே நேரத்திலே எங்களது மாவட்டத்திலுள்ள நாசவன் தீவு பற்றி, அதாவது அங்கு குடிநீர் இல்லாத பிரச்சனை உள்ளது.

ஏன் என்றால் அங்கு மணல் அகழ்வு இடம் பெறுகின்றது.

வாழைச்சேனை துறைமுகத்தினை விரிவுப டுத்துகின்றோம் என்ற பெயரிலே மணல் அகழ் வில் ஈடுபடுகின்றமை காரணமாக நாசவன் தீவு பகுதியிலுள்ள மக்களுக்கு குடிநீர் இல்லாத பிரச்சனை உள்ளது.

இந்த இடத்திலே என்னுடைய கேள்வி என்னவென்றால் நாங்கள் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்திற்கு வந்து எங்கள் மக்கள் சார்ந்த பிரச்சனைகளுக்கான கேள்விகளை எழுப்பி ஒரு வருடமும் 2 மாதங்களும் கடந்து ஒரு வரவு செலவுத்திட்டம் முடிந்தும் கூட இது வரை காலமும் எந்தவொரு வேலைத்திட்டத் திற்கும் ஒரு ரூபாய் கூட ஒதுக்கப்படவில்லை.

அண்மையில் கூட அமைச்சர் டக்ளஸ் தேவானந்த மட்டக்களப்பிற்கு வருகை தந்து நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் கட்டப்பட்ட ஒரு கட்டடத்திற்கு ஒரு குறிப் பிட்டளவு நிதியினை ஒதுக்கி அதற்கு திறப்பு விழா வைத்துள்ளார்.

மட்டக்களப்பில் இந்த ஒருவருட காலத்திற் குள் நாங்கள் மீன்பிடி துறையிலே வருமானத் தினை இழந்திருக்கின்றோம். சுருக்கு வலை காரணமாக கரைவலை பாதிக்கப்பட்டுள்ளது. ஆழ் கடல் மீன்பிடித் தொழிலாளர்களும் கடு மையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே அமைச்சர் அவர்களே இந்த வருட மாவது, இந்த வரவு செலவுத்திட்டத்திலாவது எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவீர் களா? என கேள்வி எழுப்பியிருந்தார்.

## மழை வெள்ளத்தில் மிதக்கும் நகரங்கள்

கேகாலை ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரம்புக்கனை தொம்பேமட வீதியில் வேகட பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் அவ்வீட்டிலிருந்த நால் வரில், இரு சிறுமிகள் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

தாயும், 8 வயது மற்றும் 14 வயதான அவரது இரு மகள்களும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். தந்தை காயமடைந்து கேகாலை வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை குருநாகல் அலவ்வ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாரம்மலை வென்னொ ருவ பகுதியில் வீடொன்றின் மீது மண் மேடு சரிந்து விழுந்ததில் யுவதி ஒருவர் உயிரிழந் துள்ளார்.

இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள மழை யுடனான வானிலை காரணமாக ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களில் சிக்குண்டு கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி முதல் இது வரை உயிரிழந்தோரின் எண்ணிக்கை 11 ஆக பதிவாகியுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் வடமாகாணத்தின் 5 மாவட்டங் கள் உள்ளடங்கலாக 16 மாவட்டங்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஆயிரத்து 836 குடும்பங்களைச் சே ர்ந்த 7 ஆயிரத்து 167 பேர் பாதிக்கப்பட்டுள்ள னர்.

நுவரெலியா, மாத்தளை, பதுளை, யாழ்ப் பாணம், மன்னார், காலி, மாத்தறை, இரத் தினபுரி, குருணாகல், பொலனறுவ, திருகோ ணமலை, புத்தளம், கிளிநொச்சி, மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந் தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக 2 வீடுகள் முழுமையாகவும், 89 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 24 மணித் தியாலத்தில் 200 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதன் காரணமாக யாழ். நகரின் பெரும் பகுதி வெள்ளத்தினால் மூழ்கி காட் சியளிக்கின்றது.

வெள்ளநீர் தேங்கி நிற்பதன் காரணமாக யாழ்ப்பாணம் ஸ்டான்லி விதியானது பொது மக்கள் போக்குவரத்திற்காக ஒரு வழி வீதி யாக போலீசாரால் அறிவிக்கப்பட்டு வீதித் தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரு நாட்களாக குடாநாட்டில் அதிக மழை பொழிவதோடு இன்று அதிகாலை முதல் பெரும் மழை பொழிகின்றது. இதனால் நகரின் மத்தியில் உள்ள 43 குளங்களும் நிரம்பி வழிகின்றன.

இதேநேரம் கடும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் மக்கள் பாதிக் கப்பட்டுள்ள நிலையில் 3501 குடும்பங்களைச் சேர்ந்த 12350 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே.திலீ பன் தெரிவித்தார்.

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மடுக்கரை உள்ளிட்ட சில கிராமங்களில் மக் கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் விடத்தல் தீவு,தேவன் பிட்டி உள்ளிட்ட கிரா மங்களிலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் விவசாய நிலங்களில் மழை வெள்ள நீர் சூழ்ந்து கொண்டு உள்ளமையினால் விவ சாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கும் நாளை விடுமுறை வழங் குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செய லாளர் பிரிவிற்குட்பட்ட ஊற்று புலம்கிராமத் தில் தனி தீவாக 90 குடும்பங்கள் சிக்கவுள்ள நிலையில் அவசர நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் மத்திய மலைநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறு பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதோடு, மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொ டுத்துள்ளனர். மலையகத்தில் இருக்கின்ற நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக பெய்து வந்த மழையினால் நீரோடைகள், ஆறுகள் பெருக் கெடுத்த நிலையில், நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்பட்டது.

சீரற்ற காலநிலை காரணமாக கொழும்பு மாவட்டத்தின் 10 பிரதேச செயலகப் பிரிவுக ளிலுள்ள %52 குடும்பங்களைச் சேர்ந்த 29%6 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு களனி கங்கையின் நீர் மட்டம் 8 மீற்றரை விட அதிகரிக்குமாயின் வெள்ளம் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

## யாழ்.,கிளிநொச்சி,மன்னார் மாவட்ட

வடக்கு மாகாணத்தில் நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள 3 மாவட்டங்களும் வெள்ள இடரினால் பாதிக் கப்பட்டுள்ளன.

அந்த மாவட்டங்களின் மாவட்டச் செய லாளர்கள் முன்வைத்த பரிந்துரைக்கமைய மாகாண ஆளுநரின் அனுமதியுடன் நாளைய தினம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங் கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்ட பாடசாலைகளுக்கு இன்றும் விடுமுறை வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# வாகரை கட்டுமுறிவு மக்கள் ஆர்ப்பாட்டம்





**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பிரதேசத்தின் கட்டுமுறிவு கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் அப்பகுதி மக்கள் செவ்வாய்கிழமை(09) ஆர்ப்பாட்டத்தல் ஈடுபட்டிருந்தனர்.

கட்டுமுறிவு பிரான வீதியில் வருடாந்தம் மாரி மழை காலத்தில் முற்றாக நீரினால் மூடப்படுவது வழக்கம். இந்நிலையில் கிராமிய பாலங்கள் அமைக்கும் அரசாங்கத்தின் செயற்றிட்டத்தின் கீழ் அக்குறித்த வீதியிலும் பாலம் ஒன்று அமைக்கப்படுவதற்குரிய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அது இற்றைவரை ஆரம்பிக்கப்படாததால் அவ்வீதியைப் பயன்படுத்தும் கட்டுமுறிவு, ஆண்டான்குளம், உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதும் மக்கள், மற்றும் ஆசிரியர்கள், விவசாயிகள் மாணவர்கள், உள்ளிட்ட பலரும் பலத்த அசௌகரியங்களை எதிர் கொண்டு வருவதாகத் தெரிவித்து உடன் உரிய பாலத்தை அமைத்துத் தரும்படி தெரிவித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அரசாங்கத்தினால் கிராமிய பாலங்கள் அமைக்கும் செயற்பாடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய பாலைத்தை அமைப்பதற்குரிய பொருட்கள் அவ்விடத்திலே சேமிக்கப்பட்டுள்ள போதிலும் ஏன் இற்றைவரையில் உரிய பாலத்தில் நிருமாணப் பணிகள் ஆரம்பிக்கப் படவில்லை என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# மலையகத்திலும் ஆசிரியர்கள் போராட்டம்

**(க.கிஷாந்தன், தலவாக்கலை பி.கேதீஸ்)**






அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு ஒரே தடவையில் தீர்வு வேண்டும் என வலியுறுத்தி இன்றைய தினமும் (09.11.2021) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்தே கொட்டகலை நகரில் குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கொட்டகலை புகையிரத கடவைக்கு முன்னால் போராட்டம் ஆரம்பமானதுடன், பதாதைகளை தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பிய வண்ணமும் கொட்டகலை பிரதேச சபை வரை போராட்டக்காரர்கள் ஊர்வலமாக சென்றனர்.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு 24 ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் உள்ளது. அதற்கு உடனடி தீர்வு வேண்டும். இனியும் காலம் இழுத்தடிக்கப்படக்கூடாது என அதிபர், ஆசிரியர்கள் வலியுறுத்திக் கூறினர்.

**தலவாக்கலையில் ஆர்ப்பாட்டம்..**

சம்பளப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் கோரி ஒன்றிணைந்த அதிபர்,ஆசிரியர்தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் நேற்று (9) செவ்வாய் கிழமை பிற்பகல் தலவாக்கலை நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.பாடசாலை நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், தலவாக்கலை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் பெருமளவிலான ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தலவாக்கலை பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் அணிதிரண்டு சுலோக அட்டைகள் மற்றும் பதாகைகளை ஏந்தியவாறு சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

# மன்னாரில் பரவலாக பெய்துவரும் மழையால் தாழ்ந்த பகுதி மக்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர்





**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து சில தினங்களாக நிலவி வரும் கால நிலை மாற்றத்தால் பெய்து வரும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தில் அதிகமான தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள நீரால் மக்கள் பாதிப்படைந்து வரும் நிலை காணப்படுகின்றது.

மன்னார் அனர்த்த முகாமைத்துவ திணைக்கள உதவி பணிப்பாளர் திலீபன் தெரிவிக்கையில் திங்கள் கிழமை (08.11.2021) வரை மழை வெள்ளம் காரணமாக 154 குடும்பங்களைச் சார்ந்த 500 பேருக்கு மேல் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் இதுவரை இடம் பெயந்தவர்களுக்கான இடைத்தங்கல் முகாம் எதுவும் அமைக்கவில்லையெனவும் இடம்பெயர்ந்தவர்கள் அருகிலுள்ள தங்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இப் பகுதியில் அதிகமான தாழ்ந்த பிரதேசங்களில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளபோதும் தலைமன்னார் பியர் வடக்கு, கிழக்கு, மேற்கு, எமில்நகர், நானாட்டான் மோட்டக்கடை, கட்டைக்காடு மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் கிழக்கு. மேற்கு பகுதிகளிலுள்ள தாழ்ந்த பகுதிகளில் வெள்ளநீரால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக மன்னார் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிறிய குளங்களுக்கும் பாதிப்புக்கள் எற்பட்டுள்ளதாகவும் கட்டக்காட்டிலுள்ள குளத்தின் துளசும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட பகுதியில் வீடுகளில் வெள்ளநீர் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருவதால் பிரதேச சபையானது மழைநீர் கட்டுப்பட்டு நிற்கும் இடங்களை துப்பரவு செய்து நீரை வெளியேற்றும் பணிகளிலும் ஈடுபட்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

# திருமலையில் தாய் உட்பட ஒன்பது மாத கைக்குழந்தைக்கு கோரோனா

**(திருமலை ரவ்பீக் பாயிஸ்)**

திருகோணமலை மஹாதிவுள்வெவ புபுதுப்புர பிரதேசத்தில் தாய் மற்றும் அவரின் ஒன்பது மாத கைக்குழந்தைக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஞாயிற்றுக்கிழமை காய்ச்சல், தொண்டை வலி, இருமல் என மஹாதிவுள்வெவ பிரதேச வைத்தியசாலைக்கு சமுக்கமளித்த நிலையில் அவருக்கு கொரோனா அறிகுறி தேன்படுவதாக சந்தேகித்து குறித்த 35 வயதுடைய பெண்ணுக்கு மேற்க்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது .

இந் நிலையில் குறித்த நபரின் 9மாத கைக்குழந்தைக்கும் காய்ச்சல் காரணமாக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் மேற்றக்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் அவரின் ஒன்பது மாத கைக்குழந்தைக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் இவருடன் நெருங்கிய தொடர்பினை ஏட்படுத்தியிருந்த 14 வயது சிறுமிக்கும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதகவும் மேலும் கொமரங்கடவால பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கொரோனா தொற்றுக்குள்ளான தாயின் கணவருக்கும் தொடர்ச்சியாக காய்ச்சல் ஏற்றப்பட்டுள்ளதகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அவரின் கணவர் உட்பட உறவினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்க்கொள்வதட்கான ஏட்பாடுகள் முன்னெடுத்துள்ளதாக மஹாதிவுள்வெவ பொது சுகாதார பரிசோதகர் மேற்க்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவின் முன்னாயத்தம் தொடர்பான விசேட மீளாய்வு கலந்துரையாடல்!!





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்திலும் பருவகால மழை வீழ்ச்சி ஆரம்பிக்கப்பட இருக்கும் நிலையில் பொது மக்கள் நலன் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்னாயத்தம் தொடர்பாக ஆராயும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவின் விசேட கலந்துரையாடல் 09.11.2001 செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலானது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் தலைமையில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.

இவ்விசேட கலந்துரையாடலில் மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், 231 வது படைப்பிரிவின் பிறிகேட் கொமாண்டர் திலீப பண்டார, பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரிகள் மற்றும் ஏனைய துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்காலத்தில் மழையுடன் கூடிய காலநிலை நிலவினால் அச் சந்தர்ப்பத்தில் பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக அதிலும் குறிப்பாக மாவட்டத்தில் வெள்ளத்தினால் அதிகமாக பாதிப்பிற்குள்ளாகும் கிரான், ஏறாவூர்ப்பற்று, மட்டக்களப்பு நகர், காத்தான்குடி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பாக இதன் போது விரிவாக ஆராயப்பட்டதுடன், கடந்த காலங்களில் அனர்த்த வேளைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எவ்வாறான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பது தொடர்பான விபரங்கள் இதன்போது மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் காண்பிக்கப்பட்டிருந்தது.

கமநல சேவை திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்கள் உடைப்பெடுக்கும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாவும் மாவட்டத்தில் உள்ள பாரிய குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், யானைகளால் மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு அனர்த்த வேளைகளில் முப்படையினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பொதுமக்களின் உயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும், காடுகள் மற்றும் சதுப்பு நிலங்கள் மற்றும் வெள்ளம் வடிந்தோடும் பகுதிகள் தனிநபர்களால் நிறபப்படுவதற்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேவேளை அனர்த்த காலங்களில் பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் அரிசி போன்றவற்றின் பொருட் கையிருப்பு போதுமானதாக உள்ளதா என்பது தொடர்பாக வாராந்த பொருளிருப்பு கணக்கொடுப்பினை சதோச மற்றும் தனியார் நிறுவனங்களில் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரினால் இதன்போது உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கு உற்பத்தித்திறன் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டன





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை உற்பத்தித்திறன் எண்ணக்கரு செயற்பாடுகளினூடாக மேலும் மேம்படுத்தவதற்காக செயலக உத்தியோகத்தர்களுக்கு விசேட பயிற்சிகள் திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இப்பயிற்சி கருத்தரங்கில் தகவல் தொடர்பாடல், தொழினுட்ப வசதிகளினூடாக புதிய செயலிகளை உருவாக்கி மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகளை மேலும் துரிதப்படுத்தவும், தரவுகள் தகவல்களை பேணவும், பரிமாற்றம் செய்யவும் இதன்போது ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் இடம்பெற்ற இவ்விசேட பயிற்சி கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், மாவட்ட செயலக உள்ளக கணக்காய்வாளர் திருமதி. இந்திரா மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் அரச நிறுவனங்களுக்கிடையிலான உற்பத்தித்திறன் போட்டித் தொடரில் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் பங்கேற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து இம்மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தில் மேலும் மேம்படுத்தல்களை ஏற்படுத்தவும், பொதுமக்கள் மற்றும் சேவை நாடிகள் தமது சேவைகளை இலகுவாகவும், தகவல் தொழினுட்ப வசதிகளினூடாகவும் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான ஆலோசனைகளும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

மாவட்ட செயலகத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், பதநிலை உதவியாளர்கள் மற்றும் தரவட்ட தலைவர்களுக்கு வழங்கப்பட்ட இப்பயிற்சி நெறி மாவட்ட செயலக உற்பத்தித்திறன் மேம்பாட்டு பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது உற்பத்தித்திறன் மேம்பாட்டுப் பிரிவு மாவட்ட இணைப்பாளர் ஆர். புவனேந்திரன் மற்றும் உற்பத்திதத்திறன் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உவர்மலை குமரன் விளையாட்டுக் கழகத்துக்கு 9 இலட்சம் நன்கோடை

**(அ . அச்சுதன்)**



திருகோணமலை நகரத்தில் உள்ள உவர்மலை வட்டாரத்தில் அமைந்துள்ள குமரன் விளையாட்டுக் கழகச் சீரமைப்புப் பணிக்காக திருகோணமலை நகரசபை உவர்மலை வட்டார உறுப்பினர் சி .யுவராஜ் அவர்களது வேண்டுகோளுக்கமைய திருகோணமலை மாவட்ட நலன்புரிச்சங்கத்தால் ஒன்பது இலட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது.

இதற்கான காசோலையைத் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் நேற்று வழங்கி வைத்தார், கனடாவில் வதியும் திரு . இலட்சுமணப் பெருமாள் குடும்பம் இப்பணிக்கான அனுசரணையை வழங்கி இருந்தமை குறிப்பிடத் தக்கது.


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே எமது கல்முனை பிராந்தியத்தை டெங்கு நோயற்ற பிராந்தியமாக மாற்றியமைக்கலாம்

## அட்டாளைச்சேனைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன்





(றியாஸ் இஸ்மாயில்)

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய ஒன்பது இடங்கள் பரிசோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டதாக அட்டாளைச்சேனைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் நேற்று (09.11.2021) தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நஞ்சற்ற நாட்டை உருவாக்கும் திட்டம் சம்மாந்துறையில் செயலமர்வு.

ஜனாதிபதியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சௌபாக்கிய திட்டத்தின் கீழ் எதிர்கால சமூகத்தின் நன்மை கருதி நஞ்சற்ற நாட்டை உருவாக்கும் கொள்கைக்கிணங்க நாடளராவிய ரீதியில் செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதியின் இத்திட்டத்தை கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்தும் நோக்கில். கிழக்கு மாகாண அளுநர் அனுராதா யஹம்பத்தின் அலோசனைக்கமைவாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தினால் செழுமையான கிழக்கு எனும் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு செயற்திட்டம் கடந்த இரு மாத காலமாக கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்திட்டத்தின் அடிப்படையில் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக இரசாயன உரம் மற்றும் கிருமி நாசினி பாவனையிலிருந்து விவசாயிகளை விடுவித்து அவர்களை பாரம்பரிய விவசாய செய்கையின் பால் ஈர்க்கச் செய்யும் நோக்கத்தின் கீழ் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தற்போழுது கிழக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பெரும் போக விவசாயச் செய்கையின் போது இரசாயன உரத்தை தவிர்த்து சேதன உரம், சேதன கிருமி நாசினி பாவனையை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. கிழக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு கமநல சேவை பிரிவுகளிலும் இத்திட்டம் இடம்பெற்று வருகின்றது.

இதற்கமைவாக பெரும் போக விவசாய செய்கையின் போது விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டிய பாரம்பரிய விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சம்மேளனத்தின் பிரதி நிதிகள் விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு சம்மாந்துறையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் இத்திட்டத்தின் பிரதான வளவாளர்களாக சூழலியலாளர் கே.நிஹால் அகமட் பங்கேற்று நஞ்சற்ற பாரம்பரிய விவசாயம் தொடர்பான அறிவுரை,தரமான சேதன உரம் உற்பத்தி,பாரம்பரிய குறுகியகால சேதன உர உற்பத்தி, சேதன திரவ ரீதியான கிருமி நாசினி உற்பத்தி போன்றவற்றை உற்பத்தி செயதல் மற்றும் பாவனை முறைமை தொடர்பாக. விவசாயிகளுக்கு பூரண விளக்கம் அளித்தார்.

நஞ்சறற நாடொன்றை உருவாக்குவதற்கு அனைத்து விவசாயிகளும் ஒத்துழைப்பு வழங்க முன்வருவதுடன் எதிர்கால பரம்பரையின் நிலை பேற்றிற்காக 'நஞ்சற்ற நாட்டினைக் கட்டி எழுப்புவது இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

எமது நாட்டை பொறுத்தவரையில் கடந்த காலங்களில் எமது முன்னோர் 1960ம் ஆண்டுக்கு முன்னர் எந்தவித இரசாயன நச்சுத்தன்மையான உரங்களையோ, நாசினிகளையோ, பூச்சி பீடை நாசினிகளையோ பயன்படுத்தாது இயற்கை மேல் நம்பிக்கை கொண்டு விவசாயம் செய்து வந்தனர். இயற்கையில் உள்ள பொருட்களை விவசாயத்தில் பயன்படுத்தியும் சேதன உரங்களை மாத்திரம் பயன்படுத்தியும் விவசாயத்தினை மேற்கொண்டு வந்தனர்.நச்சுத்தன்மையற்ற உணவுகளையும் மருத்துவக் குணங்கள் கொண்ட தேசிய உணவுகளையும் உற்பத்தி செய்து சுகாதாரமாக ஆரோக்கியமாக நோயற்ற திடகாத்திரமான உடலுடன் வாழ்ந்து வந்தனர். இதனை நாம் அனைவரும் உணர்ந்து செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

இதன்போது கொவிட் 19 கொரோனா தொற்று நோய் சூழலில் சுகாதாரமான ஊட்டச்சத்துமிக்க உணவினை வீட்டுச் சூழலிலேயே இயற்கை முறையில் உற்பத்தி செய்வதுடன் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதங்கான பயிற்சிக் கைநூல்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசியத் தலைவர் எம்.ஐ.உதுமாலெப்பை,மாவட்டத்தலைவர் எம்.எம்.அஜ்வத்,மாவட்ட செயலாளர் எம்.ஐ.சிறாஜுதீன்,மாவட்ட ஆலோசகர்களான மௌலவி யூ.எம்.நியாஸி,டாக்டர் ஏ.எல்.அஹமட்லெப்பை, கலாநிதி எம்.றியாஸ்,ஓய்வு பெற்ற அதிபர்ஐ.எல்.ஏ.மஜீத் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# விக்டோரியா நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறப்பு



(க.கிஷாந்தன்)

மத்திய மலைநாட்டில் பெய்து வரும் மழை காரணமாக மலையகத்தில் இருக்கின்ற நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

கடந்த தினங்களாக பெய்து வந்த மழையினால் நீரோடைகள், ஆறுகள் என பெருக்கம் எடுத்து நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்பட்டது.

அந்தவகையில் விக்டோரியா நீர்த்தேக்கதின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதன் காரணமாக இரண்டு வான்கதவுகள் நேற்று இரவு முதல் (08.11.2021) திறக்கப்பட்டுள்ளது.

மேலும் ,இதன் காரணமாக குறித்த நீர்த்தேக்கத்திற்கு தாழ் நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் மிகுந்த அவதானமாக செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் முதற்கள பணியாளர்களுக்கு பைசர் தடுப்பூசின் பூஸ்டர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் முதற் களப் பணியாளர்களுக்கான பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கு பைசர்தடுப்பூசின் பூஸ்டர் ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி.கே.கலாரஞ்சனி அவர்களின் மேற்பாவையில் இந்த தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

முதல்தர பணியாளர்களாக கடமையாற்றும் வைதியர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளிட்ட ஊழியங்களுக்கும் இதன் போது முதல்கட்டமாக பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டுவருவதாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இரண்டு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டு 6 மாதங்கள் பூர்த்தியாகிய உத்தியோகத்தர்களுக்கே இதன் போது பைசர் தடுப்பூசி போடப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பைசர் தடுப்பூசியின் பூஸ்டர் ஏற்றும் ஆரம்ப நிகழ்வில் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி.கே.கலாரஞ்சனி, பிரதான தாதிய உத்தியோகத்தர் நா.சசிகரன் உள்ளிட்ட வைத்தியசாலையில் உயரதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

# எழுத்துக்களை வாசிக்க இடர்பாடும் மாணவர்களுக்கான விசேட பயிற்சி





(ரக்ஸனா)

மட்/ககு/காயன்குடா கண்ணகி வித்தியாலயத்தில் தரம் 5 லிருந்து 8 வரை எழுத வாசிக்க இடர்படும் மாணவர்களை கருத்திற்கொண்டு அவர்களுக்கு வாசிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்கோடு பாடசாலை சமூகத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக செவ்வாய்கிழமை (09) அம்மாணவர்களுக்கான விசேட பயிற்சிக்கான ஆரம்ப நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் மட்டக்களப்பிலிருந்து இயங்கிவரும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜெயகுமணன், மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்று பணிப்பாளர் க.பிரதீஸ்வரன் ஆகியோர் பங்குபற்றினர்.

பல்வேறு கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் இவ்வாறான செயற்பாடு இப்பிரதேசத்தில் பின்னடைவாக காணப்படும் பாடசாலைகளில் அவசிய தேவையாக இருப்பதால், பரீட்சாத்தமாக இதனை ஆரம்பிப்பதாகவும் இதற்கு கனடாவில் இருந்து முருகேசு விசாகன் அவர்கள் நிதி வழங்கவிருப்பதாகவும் விவேகானந்த அறக்கட்டளையின் நிறைவேற்று பணிப்பாளர் இதன்போது தெரிவித்தார்.

இது போன்று இப் பிரதேசத்தில் இன்னும் பின்தங்கிய 15 க்கு மேற்பட்ட பாடசாலைகள் உள்ளதென்றும் அவற்றிலும் இவ்வாறு எழுத்து வாசித்தல் இடர்படும் மாணவர்கள் காணப்படுவதாகவும் அவர்களுக்கும் இவ்வாறான திட்டங்களை மேற்கொள்ளும் போது எமது கல்விச் சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும் இதன்போது கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அமைப்பின் தேசிய செயற்குழு உறுப்பினராக ஊடகவியலாளர் கபூர் நிப்றாஸ் நியமனம்

(நூருல் ஹுதா உமர்)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற நியமனம் வழங்கும் நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் தேசிய செயற்குழு உறுப்பினராக ஊடகவியலாளர் கபூர் நிப்றாஸ் அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவினால் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார். குறித்த இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸ்ஸாநாயக்கவும் கலந்துகொண்டார்.

பாஸ்ட் லங்கா செய்தி இணையத்தின் பிரதானியாகவும் அரச அனுமதி பெற்ற கட்டிட படவரைஞருமான இவர் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் மாணவருமாவார்.

கட்சியின் வளர்ச்சிக்காகவும் தலைவருடைய திட்டங்களை நடைமுறைப் படுத்தவும் கடந்த காலங்களில் விசுவாசமாக ஒத்துழைப்பு வழங்கியமையினை கௌரவித்தே இந்த பதவி தனக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் பல வகையான நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கை மக்கள்: ஆட்சி மாற்றம் ஒன்றை எதிர்பார்ப்பதாகவும் அந்த மாற்றம் ஐக்கிய மக்கள் சக்தியினால் மாத்திரமே சாத்தியமாகும் எனவே மக்களுக்கு தேவையான மாற்றம் ஒன்றை நிகழ்த்த இளைஞர்கள் தன்னோடு கை கோர்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



# ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கான காப்புறுதி இலவசமாகவே வழங்கப்பட வேண்டும்: கட்டணம் அறவிட முயற்சிப்பதை அனுமதிக்க முடியாது

## ஓய்வூதியர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கு ஓய்வூதியத்தில் இருந்து அங்கத்துவப் பணம் அறவிடப்படும் பொது நிருவாக சுற்றறிக்கையினை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமென ஓய்வூதியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கை அடங்கிய மகஜர் மேற்படி தேசிய இயக்கத்தின் உறுப்பினர்களால் பொது நிருவாக அமைச்சு செயலாளரிடம் நேரில் கையளிக்கப்பட்டதாக அதன் உப தலைவரும் ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.எம்.முக்தார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டுக்காக தம்மை 30, 40 வருடங்களாக அர்ப்பணித்து கடமை புரிந்த அரச துறை ஓய்வூதியர்களிடமிருந்து காப்புறுதி பணம் என்ற போர்வையில் ரூபா 400 முதல் 600 வரை இந்த இக்கட்டான சூழ்நிலையில் அறவிட எடுக்கப்படும் முயற்சிகளை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.

உண்மையில் ஓய்வூதியர்கள் மீது அரசுக்கு அக்கறை இருக்குமாயின் அவர்களுக்கு இலவச காப்புறுதி வழங்குவதே அவர்களது சேவைக்கு வழங்கப்படும் அங்கீகாரமாகும். அதை விடுத்து அவர்கள் பெறுகின்ற குறைந்த ஓய்வூதியத்தில் பணம் அறவிட முற்படுவது அவர்களுக்கு வழங்கப்படும் சிரேஸ்ட பிரஜைகள் என்ற அந்தஸ்தை கேலி பண்ணும் செயற்பாடாகவே அமையும்.

இந்த அரசங்கம் பதவிக்கு வந்த நாள் முதல் ஓய்வூதியர்களை குறிவைத்துத் தாக்குகிறது. எதிர்காலத்தில் ஓய்வூதியத்தினை நிறுத்திவிடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா எனவும் சந்தேகிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

2016 - 2019 காலப்பகுதிக்குள் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றோருக்கு 2020 முதல் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய அதிகரிப்பை மிக அநீதியான முறையில் இந்த அரசாங்கம் இடைநிறுத்தியது. இதற்கான தீர்வு இதுவரை வழங்கப்படவில்லை. இந்த அநீதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசினால் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்பது மர்மமாக உள்ளது- எனவும் குறிப்பிட்டார்.

# மடத்தடி மீனாட்சி அம்மனாலயத்தில் மலர்க்கன்றுகள் நடுகை



( வி.ரி.சகாதேவராஜா)



வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி மாட்டுப்பளை ஸ்ரீ மீனாட்சிஅம்மன் ஆலய வளாகத்தில் மலர்க்கன்றுகள் நேற்று நடப்பட்டன.

இறைவனுக்கு சாத்தும் மலர்களைத்தரக்கூடிய மல்லிகை செவ்வரத்தை போன்ற மலர்க்கன்றுகனே இவ்விதம் மழை பெறும் இக்காலகட்டத்தில் நடப்பட்டன. ஆலய மகாகும்பாபிசேகம் பெரும்பாலும் எதிர்வரும் தைமாத இறுதியில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்ற இவ்வேளையில் மலர்க்கன்றுகள் நடப்பட்டன.

ஆலயபரிபாலனசபைத்தலைவர் கி.ஜெயசிறில் ஆலய ஆலோசகர் ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா நிருவாகத்தினர் மற்றும் ஆலயத்திற்கு வருகைதந்திருந்த அம்மன் அடியார்கள் இம்மலர்க்கன்றுகளை நட்டுவைத்தனர்.

நட்டு அரைமணிநேரத்தில் 'சோ..'வென மழை பொழிந்தமை குறிப்பிடத்தக்கது.

நூற்றுக்கணக்கான இம்மலர்க்கன்றுகள் வளர்ந்துவருகின்ற பட்சத்தில் வெளியிலிருந்து ஆலயத்திற்கு மலர்கள் கொண்டுவருவதற்கான தேவை குறைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# MATHE BILDUNGSZENTRUM
# கணித கற்கைநெறி மையம்

MBZ

**கல்வியே துணை**

பள்ளித் தலைமைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

**Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung**
**BMS, HMS, FMS, Gymi Probe**

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

**Oerlikon, Uster, Schaffhausen**


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு.
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Restaurant
GRÜNAU
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL,
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT




# சட்டவிரோத மீன்பிடியை தடுக்க முதுகெலும்பில் பலம் இல்லாத ஜனாதிபதி ;
## திருகோணமலை மாவட்ட மீனவர் சங்கம் சாடல்

(திருகோணமலை றவ்பீக் பாயிஸ்)

திருகோணமலையில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுக்க எமது ஜனாதிபதிக்கு முதுகெலும்பில் பலம் இல்லையா என பகிரங்க கேள்வி ஒன்றை திருகோணமலை மாவட்ட மீனவர் சங்கம் கேட்டுள்ளது

திருகோணமலை மாவட்ட ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்திருந்தனர்




மேலும் அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது...

திருகோணமலையில் தொடர்ச்சியாக சட்டவிரோத வெடிபொருள் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதை இந்த அரசாங்கம் தடுக்க முடியாமல் இருப்பதாகவும் இது தொடர்பில் ஆதாரங்களுடன் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேட்கொள்ளாமல் இருப்பது அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டது போன்று பல கிலோ கணக்கில் வெடிபொருட்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் இதனை தடுப்பதற்கு ஜனாதிபதிக்கு முதுகெலும்பில் பலம் இல்லையா எனவும் விசனம் தெரிவித்தனர்.

மேலும் அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது சட்ட விரோத மீன்பிடியினை முற்றாக தடை செய்வதாக வாக்குறுதியளித்து ஆட்சியில் அமர்த்ததன் பின்னர் ஏன் இந்த வேலையினை செய்ய மறுக்கின்றனர் இவ்வாறு சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களை கைது செய்யாமல் இருந்தால் எவ்வாறு நாங்கள் எங்கள் வாழ்வாதாரத்தினை முன்னெடுப்பது மேலும் இந்திய மீனவர்கள் வடக்கு பிரதேசத்தில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் ஏன் எமது கடற்படைக்கு இதனை தடுக்க முடியாமல் உள்ளது ஏன் இரண்டு நாடுகளுக்கும் பிரச்சினை ஏற்ப்படும் என ஐயம் கொள்கின்றனரா? நாட்டின் தேசிய வளங்களை விற்பனை செய்து தமது சொத்துக்களை செமிக்க்கின்றனர் அவ்வாறு செய்வதனை விட்டு விட்டு இந்த நாட்டில் தினக்கூலி தொழிலாளிகளை பார்க்கவும் எமது மீனவர்களின் ஜீவனோபாயத்தினை பாதுகாக்கவும் திருகோணமலையில் இவ்வாறு பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நிவாரணம் தருவதாக திருகோணமலை மாவட்ட அரசியல் வாதிகள் வாக்குறுதி தந்திருந்தனர் இது வரை எந்த நிவாரணமும் எமக்கு கிடைக்க வில்லை நாட்டின் அரசியல் வாதிகளுக்கு நாட்டின் மேல் பற்று இருக்க வேண்டும் இவர்களுக்கு அவ்வாறு நாட்டு பற்று இல்லை.

நாட்டை ஆட்சி செய்வதாக இருந்தால் சரியாக ஆட்சி செய்ய வேண்டும் நாட்டின் அபிவிருத்தியினை மேம்படுத்த வேண்டும் மக்களின் பிரச்சினைகளுக்கு செவி சாய்க்க வேண்டும் என இறுதியாக ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்வதாக திருகோணமலை மாவட்ட மீனவர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இவ் ஊடக சந்திப்பில் மாவட்ட மீனவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட பிரஜைகள் குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் யோகட் உற்பத்தி உபகரணங்கள் வழங்கி வைப்பு



(ஏ.எல்.றியாஸ்)

பொத்துவில் பிரதேச மகளிர் உற்பத்தி சேவைகள் கூட்டுறவுச் சங்கத்திற்கு உணவுப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான யோகட் உற்பத்திக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் சிபாரிசுக்கிணங்க கருஈஎ குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாகவே மேற்படி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த உபகரணங்களை பொத்துவில் பிரதேச மகளிர் உற்பத்தி சேவைகள் கூட்டுறவுச் சங்கத்திற்கு கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (08) பொத்துவில் மகளிர் உற்பத்தி சேவைகள் சங்கத் தலைமை கட்டிடத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவி எஸ்.றகீபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி பிரதம அதிதியாகவும், கல்முனை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கலாதேவி உதயராஜா கௌரவ அதிதியாகவும், தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ.எம்.பரீட், ஏ.எம்.ஷாபி, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.சி.ஜலால்டீன், கே.காந்தரூபன், ஏ.சுஹைர் அலி, எஸ்.ஜாபீர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது காஞ்சிரங்குடா பாற்பண்ணையாளர் பயிற்சி மத்திய நிலையத்தில் யோகட் உற்பத்தி மற்றும் பாற்பொருட்களை உற்பத்தி செய்தல் தொடர்பான பயிற்சி நெறியில் கலந்துகொண்டவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

உணவுப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் சிபாரிசுக்கிணங்க கருஈஎ நிதி ஒதுக்கீட்டின் ஊடாக, கிழக்கு மாகாணத்தில் ஐந்து சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைகளை சுத்தப்படுத்திக் கழுவிக் கொள்ளும் நவீன உபகரணம் வழங்கி வைப்பு



(எம்.ஏ.றமீஸ்)

கொவிட் தொற்று காரணமாக கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்த பாடசாலைகளில் இரட்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து அம்பாறை றொட்டரி கழகத்தின் மூலம் பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி பல்வேறு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, அக்கரைப்பற்று அல் முனவ்வறா கனிஷ்ட கல்லூரிக்கு மாணவர்களின் சுகாதார நடைமுறைகளை கட்டியெழுப்பும் வகையில் கைகளைச் சுத்தப்படுத்திக் கழுவுக் கொள்ளும் நவீன உபகரணம் நேற்று(09) வழங்கி வைக்கப்பட்டது.

அதிபர் எம்.ஐ.எம்.உவைஸ் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது றொட்டரி கழகத்தின் அம்பாறை மாவட்ட புதிய கிளைகள் புனரமைப்புப் பொறுப்பாளரும், ஓய்வு நிலை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளருமான பொறியியலாளர் என்.ரி.எம்.சிறாஜுதீன் தலைமையிலான குழுவினர் பாடசாலை நிருவாகத்தினரிடம் கையளித்தனர்.

இதன்போது ஓய்வு நிலை அதிபர் எம்.எச்.தாசீம், பிரதி அதிபர் எம்.தாஹா, மௌலவி எம்.பைஷல் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

கொவிட் காரணமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகளில் மாணவர்களுக்கு இவ்வாறு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படும் வகையில் நவீன கைகளைச் சுத்தப்படுத்தும் உபகரணங்களை வழங்கி வரும் அம்பாறை றொட்ரி கழகத்திற்கும் பொறியியலாளர் றொட்ரியன் என்.ரி.எம்.சிறாஜுதீனுக்கும் பாடசாலைச் சமூகத்தினர் இதன்போது நன்றியினைத் தெரிவித்தனர்.

# கொட்டும்மழையில் நள்ளிரவில் சுகாதாரமுறைப்படி நான்கு உண்டியல்கள் திருட்டு

## காரைதீவு நந்தவனப்பிள்ளையார் ஆலயத்தில் சம்பவம் சிசிவிரி கமராவிலும் பதிவு



( வி.ரி.சகாதேவராஜா)

கொட்டும்மழையில் நள்ளிரவில் சுகாதாரமுறைப்படி மாஸ்க் அணிந்துவந்த நபரால் நான்கு உண்டியல்கள் தகர்க்கப்பட்டு திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் காரைதீவு நந்தவனப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்று(09 )செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் ஆலயத்திலுள்ள சிசிவிரி கமராவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு 12.30 -1.30மணிவரையான காலப்பகுதியில் திருடனொருவன் தலைக்கவசத்துடன் சுகாதாரமுறைப்படி மாஸ்க் அணிந்து ஜாக்கட் அணிந்து மதில்மேலால் ஏறி ஆலயத்துள் குதித்து ஆறுதலாக ஒருமணிநேரம் இந்த திருட்டுச் சம்பவத்தை நடாத்தியுள்ளான்.

மழைபொழிந்துகொண்டிருப்பதும் திருடனைக்கண்டதும் நாய் குரைப்பதும் கமராவில் பதிவாகியுள்ளது.

காலையில் உண்டியல்கள் தகர்க்கப்பட்டு அங்கிருந்த பணம் திருடப்பட்டமை ஆலய நிருவாகத்திற்கு தெரியவந்தது. அவர்கள் காரைதீவு மற்றும் சம்மாந்துறைப் பொலிசில் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

பொலிசார் மேலதிக விசாரணகளை மேற்கொண்டுள்ளனர்.

# அம்பாறை மாவட்ட பெண்களுக்கான கிரிக்கட் போட்டியில் திருக்கோவில் அணி வெற்றிவாகை!

## 14 வருடங்களின் பின் தேசியப்போட்டிக்குதெரிவு! பிரதேச செயலாளர் கஜேந்திரன் வாழ்த்து





( வி.ரி.சகாதேவராஜா)

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் 33வது தேசிய விளையாட்டுவிழாவையொட்டி ,அம்பாறை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட பெண்களுக்கான கிரிக்கட் போட்டியில் திருக்கோவில் பிரதேசசெயலக அணி முதலாமிடம் பெற்று வெற்றிவாகை சூடியுள்ளது.

இப்போட்டியானது ,அம்பாறை பொது விளையாட்டுமைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பெண்களுக்கான கிரிக்கட் போட்டியில் உகன ,திருக்கோவில் ,கல்முனைவடக்கு ஆகிய மூன்று பிரதேச செயலக அணிகள் பங்கேற்றன.

அணிக்க 6பேர் கொண்ட 5ஓவர் கிரிக்கட் சுற்றுப்போட்டியில், இறுதிப்போட்டிக்கு உகன பிரதேச செயலக அணியும் திருக்கோவில் பிரதேசசெயலக அணியும் தெரிவாகி மோதின.

அப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய உகன அணி 5ஓவர் நிறைவில் 46ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெத்தாடிய திருக்கோவில் அணி 3.5ஓவர்களில் 47ஓட்டங்களை எடுத்து வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

திருக்கோவில் அணித்தலைவி முத்துராமன் பிருந்தா (தாண்டியடி) தனதுஅணிக்காக 39ஓட்டங்களைப்பெற்றுக்கொடுத்து போட்டியின் சிறந்த ஆட்டக்காரராக தெரிவுசெய்யப்பட்டார்.

இப்போட்டியில் திருக்கோவில் பெண்கள் அணி முதலாமிடம் பெற்று தேசியப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.14 வருடங்களின் பின்னர் இரண்டாவது தடவையாக திருக்கோவில் அணி தேசியப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

திருக்கோவில் இளைஞர்சேவை அதிகாரி கே.பிரபாகரன் தலைமையில் பெண்கள் கிரிக்கட் அணியினரோடு அம்பாறை சென்ற குழுவில் .இளைஞர் கழக ஒருங்கிணைப்பாளர் ரி.நிஷாந்தன் பயிற்றுவிப்பாளர்களான என்.லவகேஸ்வரன் என்.யதுசன் உள்ளிட்டோர் சென்றிருந்தனர்.

மாவட்ட சாம்பியனாகி தேசிய மட்ட போட்டிக்குத்தெரிவான பெண்கள் கிரிக்கட் அணியினருக்கு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

திருக்கோவில் இளைஞர்சேவை அதிகாரி கே.பிரபாகரன் கூறுகையில் திருக்கோவில் வரலாற்றில் இது இரண்டாவது தடவையாக தேசியப்போட்டிக்குத் தெரிவான சந்தர்ப்பம். இதற்கு முதல் 2007 இல் திருக்கோவில் அணி தேசியப்போட்டிக்குதெரிவாகி கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். வெற்றிக்கான உழைத்த அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக கூறினார்.

# இளைஞர்சக்தியின் அம்பாறை மாவட்ட செயலாளராக வினோகாந்த்



( வி.ரி.சகாதேவராஜா)

ஐக்கிய மக்கள் இளைஞர் சக்தியின் அம்பாறை மாவட்ட இணைச் செயலாளராக, ஐக்கியமக்கள் சக்தி கட்சியின் அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேசங்களுக்கான அமைப்பாளரான வெள்ளையன் வினோகாந்த் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்க்கட்சித்தலைவரும், ஐக்கியமக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் (8)திங்களன்று கொழும்பில்வைத்து வழங்கிவைத்தார்.

அச்சமயம், ஐக்கிய மக்கள் இளைஞர் சக்தியின் இலங்கைக்கான தலைவர் மஹேன் திசாநாயக்கவும் உடனிருந்தார்.

ஐக்கியமக்கள் சக்தி கட்சியின் அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேசங்களுக்கான அமைப்பாளரான வெள்ளையன் வினோகாந்த் கடந்தகாலங்களில் அர்ப்பணிப்புடன் ஆற்றிய பணிகளையும் சேவைகளையும் கருத்திற்கொண்டு இப்பாரிய நியமனம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அங்கு நாடளாவிய ரீதியில் இணைச்செயலாளர்கள் அமைப்பாளர்கள் நியமனம் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பட்டிப்பளை கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'கவிஞர் மேரா' வின் ஆறு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு

(மட்டு.துஷாரா)

பட்டிப்பளை கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'கவிஞர் மேரா'வின் ஆறு நூல்கள் வெளியீடு நிகழ்வு அண்மையில் முனைக்காடு உக்டா பண்ணையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதம அதிதிகளாக பேராசிரியர் மா.செல்வராஜா, பேராசிரியர் செ.யோகராசா ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக கலாநிதி உசாந்தி துரைசிங்கம், கிழக்கு பல்கலை சிரேஷ்ட விரிவுரையாளர் சு.சந்திரகுமார்,

விரிவுரையாளர் த.விவேகானந்தராசா, மட்டக்களப்பு தபால் திணைக்கள பிராந்திய கணக்காளர் திருமதி சந்திரகலா ஜெயந்திரா, ஓய்வு நிலை கோட்டக்கல்வி பணிப்பாளர் த.சோமசுந்தரம், ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.தயாசீலன்,

ஆசிரியர் மத்திய நிலைய ஓய்வு நிலை முகாமையாளர் சி.குருபரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



# அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் காலம் நெருங்கி வருகின்றது

## சம்மாந்துறையில் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

**(சம்மாந்துறை நிருபர் ஐ.எல்.எம் நாஸிம்)**

இந்த ஆட்சியாளர்கள் அப்பாவி விவசாயிகள் பதுக்கி வைத்த நெல்லைத்தான் பறித்துப் போவதற்கு வந்தார்கள். சிறிய அரிசி ஆலை சொந்தக்காரர்களுக்குத்தான் பெரிய சோதனையாக இருந்தது. ஆனால், பெரிய அரிசி ஆலை சொந்தக்காரர்களுக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. அவர்கள் நினைத்தமாதிரித்தான் அரிசியின் விலையை தீர்மானிக்கின்றார்கள். இன்று சந்தையில் கீரிசம்பாவின் விலை 225 ரூபாவுக்கு அதிகரித்துள்ளது. பசளைப் பிரச்சினையால் அடுத்த போகத்திற்கு விளைச்சலும் குறைந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நாட்டில் பஞ்சம் வந்துவிடுமா என்றதொரு பிரச்சினையும் வரலாம். எவ்வாறு இருப்பினும் எங்களின் பார்வையில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் காலம் நெருங்கி வருகின்றது என்றுதான் தெரிகின்றது.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பாரளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறை இளைஞர் அணி உறுப்பினர்களில் 2020ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறை இளைஞர் அணியின் தலைவர் ஹாதீக் இப்றாகிம் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு வைபவத்தில் ரவூப் ஹக்கீம் தொடர்ந்து உரையாற்றுகையில்,



அரசாங்கம் என்னதான் பொருளாதாரக் கொள்கைளை கடைப்பிடித்தாலும், அரசாங்கத்தின் அண்மைக் கால செயற்பாடுகள் பொருட்களின் விலைவாசி உயர்வை எந்த விதத்திலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பொருளாதாரக் கொள்கை இருப்பதை நாங்கள் பார்க்கிறோம்.

இன்று எல்லா இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களைப் பார்க்கின்றோம். விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள். மறுபக்கத்தில் ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது, சேதனப் பசளை விவகாரம் வேறொரு பிரச்சினையாக இருக்கின்றது. இப்படி ஆட்சியாளர்கள் ஆயிரம் பிரச்சினைகளுக்கு மத்தியில் தடுமாறிக் கொண்டிருக்கின்ற காலமாக இருக்கின்றது.

ஆட்சியாளர்கள் எல்லாவற்றிக்கும் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கு வர்த்தமானி அறிவிப்பை போட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது அதெல்லாம் விட்டுவிட்டார்கள். வர்த்தமானி அறிவித்தல் போட்டும் விலைகளை கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்களின் கட்டுப்பாட்டு விலைக்கு சாமான்களை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனாலே வர்த்தமானி அறிவித்தலில் எந்த பிரயோசனமும் இல்லை என்று அரசாங்கம் உணர்ந்துள்ளது. வர்த்தமானி அறிவிப்புக்களை எல்லாம் அரசாங்கம் வாபஸ் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருளின் விலையை பற்றி பேசி பிரயோசனமில்லை. அது பல மடங்கு ஏறியுள்ளது. அடுத்த 12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் வரவு - செலவு திட்டத்தை நிறைவேற்ற இருக்கின்றார்கள். வரவு - செலவு திட்டத்திலே என்ன பொருட்களுக்கு விலையேறும் என்று தெரியாது. வரவு - செலவு திட்டம் சும்மா பூச்சாண்டிக்காக போடும் விசயம்தான். அதன் பிறகு வர்த்தமானி மூலம் பொருட்களின் விலைகளை கூட்டி விடுவார்கள்.

வழமையாக வரவு - செலவு திட்டத்திலே சிகரெட்டின் விலையை மட்டும்தான் கூட்டுவார்கள். இன்று ஒரு இடத்திலேயும் கோலிப் (சிகரெட்) இல்லை. இப்போதே பதுக்கத் தொடங்கி விட்டார்கள்.

இந்த ஆட்சியாளர்கள் அப்பாவி விவசாயிகள் பதுக்கி வைத்த நெல்லைத்தான் பறித்துப் போவதற்கு வந்தார்கள். சிறிய அரிசி ஆலை சொந்தக்காரர்களுக்குத்தான் பெரிய சோதனையாக இருந்தது. ஆனால், பெரிய அரிசி ஆலை சொந்தக்காரர்களுக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. அவர்கள் நினைத்தமாதிரித்தான் அரிசியின் விலையை தீர்மானிக்கின்றார்கள். இன்று சந்தையில் கீரிசம்பாவின் விலை 225 ரூபாவுக்கு அதிகரித்துள்ளது. பசளைப் பிரச்சினையால் அடுத்த போகத்திற்கு விளைச்சலும் குறைந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நாட்டில் பஞ்சம் வந்துவிடுமா என்றதொரு பிரச்சினையும் வரலாம். எவ்வாறு இருப்பினும் எங்களின் பார்வையில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் காலம் நெருங்கி வருகின்றது என்றுதான் தெரிகின்றது. இந்த ஆட்சியாளர்கள் எடுத்ததெல்லாம் பிழைத்துக் கொண்டுதான் போகின்றது.

# ஆயர்களின் அறிவிப்பு மீளப் பெறவேண்டும்

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்புவேண்டுகோள்

**(ரக்ஸனா)**

இம்மாதம் 20ஆம் திகதி ''மதங்களைக் கடந்து இறந்தவர்களை நினைவு கூறுவோம்'' என வடகிழக்கு ஆயர்கள் கூட்டாக அறிவித்திருப்பது தமிழர் தாயகம் மீது அரசியல் தாகம் கொண்டவர்களை, மாவீரர்களை தியாகிகளாக ஆத்மீக ரீதியில் உணர்வுபூர்வமாக அர்ச்சித்து எழுச்சியோடு நினைவு கூறுபவர்களை பல்வேறு சந்தேகத்திற்கும் வேதனைக்கும் கோபத்திற்கும் உள்ளாக்கி இருப்பதால் இவ்வறிவித்தலை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது.

இதுதொடர்பில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு சாரபில் மனித உரிமை ஆர்வலரும் சமூக நீதிக்கான செயற்பாட்டாளரமான, அருட்தந்தை மா.சக்திவேல் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;



மே மாதம் 18ஆம் திகதி யுத்தத்தில் கொல்லப்ப ட்ட தம் உறவுகளை வடகிழக்கு மக்களும் , புலம்பெயர் தமிழர்களும் அஞ்சலி செலுத்துகின்றனர். அத்தினத்தில் அரசியல் நீதிக்கான அவசரத்தையும் வலியுறுத்தி செயற்படுகின்றனர். கத்தோலிக்கத் திருச்சபை அருட்தந்தையர்களும் நினைவு கூர்தலில் துணிச்சலோடு முன்நின்று செயல்படட்டுக் கொண்கின்றனர். அது மட்டுமல்ல முன்னாள் மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் அடிகளார் தமிழர்களின் அரசியல் குரலாக ஒலித்தவர் இவர்களை நன்றியோடு பார்க்கின்றனர் தமிழர்கள்.

இந்நிலையில் மாவீரர் வாரம் என்பது இறந்தவர்களை நினைவு கூறும் காலம் அல்ல. தமிழர்களின் தாயக அரசியலுக்காக உயிர்த்தியாகம் மானவர்களை, தமிழர் தாயக மண்ணில் வித்தாகி தமிழர் உள்ளங்களில் உயிர்ப்போடு வாழ்ந்து எமது அரசியலை இன்னும் கூர்மைப்படுத்தகின்ற தியாகிகளுக்கு தியாகச் சுடரை ஏற்றி கௌரப் படுத்துகின்ற வாரமாகும். இத்தகைய புனித வாரத்தின் முதல் நாள் இறந்தவர்களை நினைவு கூறுவோம் என அழைப்பு விடுப்பது மாவீரர் குடும்பங்களையும், அவர்களை தியாகிகளென, புனிதர்களென நினைக்கன்றவர்களை மட்டுமல்ல மாவீரர்களையும் அவர்கள் எந்த அரசியலுக்காக தியாகமானார்களோ அந்த அரசியலையும் அவமதிக்கின்ற செயலுமாகும்.

தமிழர்களின் அரசியல் போராட்ட வரலாற்றில் உயிர்த் தியாகிகள் ஆன அருட்தந்தையர்கள் போராட்டக் களத்தில் நின்றவர்கள் என நூற்றுக்கணக்கான கத்தோலிக்கர்கள் உள்ளனர் அதே போன்று காணாமற்போன கத்தோலிக்கர்களும் உள்ளனர் இவர்களுக்காக நினைவுநாளை அறிவிக்காத திருச்சபை மாவீரர் வாரத்தின் முதல் நாள் நினைவு நாளாக அறிவித்தது ஏன்?

தமிழர் தாயகத்தையும் தமிழர் தாயக தேசிய அரசியலையும் சிதைக்க சர்வதேசசக்திகளும் உள்ளூர் சக்திகளும் கைகோர்த்து நிற்கின்ற காலம் இது தமிழர்கள் 30 வருடங்களுக்கு முன்பே ஏற்றுக்கொள்ளாத மாகாணசபையை முழுமையாக உட்படுத்துமாறு அழிவு சக்திகள் கூடுகின்ற காலங்களில் இன்னும் ஒரு பக்கம் ஒரே நாடு ஒரே சட்டம் என இனவாத காவியின் கையில் இனஅழிப்பை தீவிரமாக திட்டமிடுகின்றனர் இந்நிலையில் இறந்தவர்களை நினைவு கூற மாவீரர் வாரத்தின் முதல் நாளே அறிவிப்பதன் மூலம் ஆயர்களும் எமக்கு எதிரான சக்திகளோடு மறைமுகமாக கைகோர்த்து எனது அரசியல் உணர்வையும் தியாக வரலாற்றையும் நீர்த்துப்போகச் செய்வதற்கான செயற்பாடுகளில் பெண்ணுக்கும் என சந்தேகம் கொள்ள வைக்கின்றது.

அத்தோடு வேறு சமயத் தலைமைகளையோ, பொது அமைப்புக்களையோ கலந்துரையாடாது இத்தகைய பொது அறிவித்தலை விடுப்பது அவர்களை அவமதிப்பதாக அமைந்திருப்பதோடு தன்னிச்சையாக அறிவிப்பு செய்த்திருப்பது தமிழர்கள் மத்தியில் இன்னுமொரு பிளவையும் ஏற்படுத்திவிடலாம் என்பதையும் சிந்திக்க தவறியது வேதனைக்குரியது.

ஆதலால் மாவீரர் வாரத்தின் புனிதம், மாவீரர்களின் தியாக வரலாற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் செயற்பாடு, தாயக அரசியலுக்கான கூட்டு செயற்பாடு என்பனகருதி 'சமயம் கடந்து இறந்தவர்களை நினைவு கூருவோம்' எனும் அறிவித்தலை வடகிழக்கு ஆயர்கள் மீளப் பெற்றுக் கொள்ளுமாறு கௌரவத்தோடு வேண்டுகோள் விடுக்கின்றோம். என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வு!!



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

தற்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிறப்பு, இறப்பு, பொது விவாகப் பதிவாளர் மற்றும் முஸ்லிம் விவாகப் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவிவரும் நிலையில் அவ்வெற்றிடங்களை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு கட்டங்கட்டமாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களது ஆலோசனைக்கு அமைவாக மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் தலைமையில் மாவட்ட செயலகத்தில் தொடர்சியாக இடம்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் மாவட்டத்தில் முஸ்லிம் விவாகப் பதிவாளர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்ற பகுதிகளில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வாழைச்சேனை மற்றும் பிறைந்துரைச்சேனை பதிவாளர் பிரிவுகளுக்கும், கோறளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ரிதிதென்ன பதிவாளர் பிரிவிற்கும், கோறளைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தியாவட்டவான் பதிவாளர் பிரிவிற்குமான முஸ்லிம் விவாகப் பதிவாளர்களைத் ணதெரிவு செய்யும் நேர்முகத் தேர்வு செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இப் பதவி வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்திருந்த விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு ஆர்வத்துடன் சமுகந்தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் 06 பாதுகாப்பு இடங்களில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கவைப்பு

## இன்று பாடசாலைகளுக்கு விடுமுறை

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னாரில் காலநிலை தொடர்ந்து இயல்புநிலைக்கு திரும்பாத நிலை காணப்படுவதாலும் பல இடங்களில் வெள்ளப் பெருக்காக காட்சி அளிப்பதாலும் மன்னார் மற்றும் மடு கல்வி வலயப் பணிப்பாளர்களுடன் கலந்தாலோசித்ததுக்கு அமைவாக புதன்கிழமை (10.11.2021) பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படுவதாக மன்னார் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒன்பது நாட்களாக (01.11.2021 09.11.2021) பெய்து வந்த மழையின் காரணமாக 4215 குடும்பங்களைச் சார்ந்த 14951 நபர்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகியபோதும் 10% குடும்பங்களைச் சார்ந்த 391 நபர்கள் ஆறு பாதுகாப்பான அமைவிடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக மன்னார் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மன்னார் நகர் பிரதேச செயலகப் பிரிவில் எழுத்தூர் செல்வநகர் பகுதியில் 15 குடும்பங்களைச் சார்ந்த 60 நபர்கள் அறநெறி பாடசாலையிலும்,

தலைமன்னார் பியர் பகுதியைச் சேர்ந்த 37 குடும்பங்களைச் சார்ந்த 113 நபர்கள் ஸ்ரீதேவி முத்துமாரியம்மன் கோவிலிலும் எமில்நகர் பகுதியைச் சேர்ந்த 40 குடும்பங்களைச் சார்ந்த 161 நபர்கள் சென்.மதர் திரேசா பாடசாலையிலும், தலைமன்னார் கிராமம் தெற்கு பகுதியிலுள்ள 7 குடும்பங்களைச் சார்ந்த 24 நபர்கள் சென்.லோறன்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், சவுத்பார் பகுதியிலுள்ள 4 குடும்பங்களைச் சார்ந்த 17 நபர்கள் கிறிஸ்துராஜட ஆலயத்திலும்

மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் விடத்தல்தீவு பகுதியிலுள்ள 4 குடும்பங்களைச் சார்ந்த 16 நபர்கள் மொத்தம் 107 குடும்பங்களைச் சார்ந்த 391 பேர் குறிப்பிடப்பட்ட பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக மன்னார் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் மன்னார் பகுதியில் பரவலாக அதிகமான தாழ்ந்த பகுதி இடங்களில் மழைநீர் வெள்ளம் காரணமாக சில பகுதிகளில் போக்குவரத்து செய்ய முடியாத நிலை காரணமாகவும் தொடர்ந்து மன்னாரில் காலநிலை இயல்பு நிலையற்ற தன்;மையில் காணப்படுவதாலும் மன்னாரில் அனைத்து பாடசாலைகளும் புதன்கிழமை (10.11.2021) இன்று விடுமுறை வழங்கப்படுவதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரன்லி டீமெல் தெரிவித்துள்ளார்.

# பாராட்டி பரிசளிக்கும் நிகழ்வு





**(கல்லடி நிருபர்)**

இளம் சமூக தொழில் முனைவோர், புதிய உற்பத்தி மற்றும் சக வாழ்வை ஏற்படுத்தும் செயற்திட்டத்தின் ஊடாக

கிழக்கு மாகாணத்தில் இளம் சமூக தொழில் முனைவேராக தேர்வுசெய்யப்பட்ட 11 குழுக்களை பாராட்டி பரிசளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

சர்வேதயம் சாந்திசேனா அமைப்பும், க்மீஈக யும் இணைந்து முன்னெடுத்துவரும் வேலைத்திட்டத்தின் ஊடாக இளம் சமூகத்தினரை வளப்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாரை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த 11 இளம் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான தொழில் முயற்சிகளுக்கான உதவித் தொகை இதன்போது வழங்கிவைக்கப்பட்டது.

பிரதம அதிதியாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்விற்கு விசேட அதிதிகளாக க்மீஈக நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் கலாநிதி பிரியன் செனவிரட்ண, சர்வோதயம் அமைப்பின் தலைவர் கலாநிதி வின்ய ஆரியரெட்ண, மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் பீ.சசிகுமார் மற்றும் சர்வோதயத்தின் உயரதிகாரிகள் உள்ளிட்ட மேலும் பலர் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

அதிதிகள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து, சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் அதிதிகளின் விசேட உரையினைத் தொடர்ந்து இளம் தொழில் முனைவோர் குழுக்களுக்கு பாராட்டி ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டதனைத் தொடர்ந்து, இளம் தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வுடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.0

# விவசாயிகளை முட்டாளாக்க அரசு நினைக்கிறது ஆனால் முட்டாளாவது அரசாங்கமே

## மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

**(இ.சுதாகரன்)**

சோளனுக்கு யூரியா உரம் போடலாம் என்றால் ஏன் நெற்செய்கைக்கு யூரியா உரம் பாவிக்கமுடியாது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசு கட்சி ஊடக செயலாளரும் பட்டிருப்புத் தொகுதித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அரசின் சேதனப் பசளைத்திட்டம் தொடர்பாக மேலும் கூறுகையில்,

சோளன் செய்கைக்காக ஐயாயிரம் மெற்றிக்தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்வதாக இராஜாங்க அமைச்சர் சாணக வகும்பர கூறியுள்ளார். அப்படியானால் நெல்லுக்கு மட்டும் யூரியா உரம் பாவிப்பதை ஏன் தடுக்க வேண்டும். இது விவசாயிகளை முட்டாளாக நினைக்கும் இந்த அரசின் செயலாகும். சேதனப் பசளைத் திட்டம் இலங்கையில் வெற்றியடையாது என்பதை இன்னும் மூன்று மாதங்களால் அரசாங்கம் உணரும்.

சேதனப் பசளையை நெற்செய்கைக்கு கட்டாயம் பாவிக்க வேண்டும் என ஒரு பக்கம் பிரசாரங்களை செய்துகொண்டு அதற்கான வெளிச்சத்தை சில அமைச்சர்களும் அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் காட்ட முற்படுகிறார்கள். அவ்வாறானவர்களின் நாடகம் எல்லாம் இந்த பெரும்போக செய்கையுடன் புஷ்வானமாக மாறிவிடும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெற்செய்கை விதைத்து மூன்று வாரங்களை தாண்டுகிறது. அனேக விவசாயிகள் ஏற்கனவே கடந்த வருடம் எடுத்த இரசாயன உரங்களை பாவித்துள்ளனர். இன்னும் பல விவசாயிகள் களவாக யூரியா உரத்தை விற்பனை செய்யும் வியாபாரிகளிடம் ஒரு மூடை யூரியாவை ரூபா பத்தாயிரம் தொடக்கம் பன்னிரெண்டாயிரம் செலுத்தி வாங்கி வயல்களில் உரத்தை இடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தற்போது திரவ உரம் என்ற போர்வையில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்



யப்படும் திரவ கலவை நெற்செய்கைக்கு பொருந்தாது என்பதை பல விவசாயிகள் ஆதார பூர்வமாக மட்டக்களப்பில் தெரிவிக்கின்றனர்.

நிலத்தில் இருந்து வேர் மூலமாக நைதரசனை உறிஞ்சி நெற்பயிர்களுக்கு சென்றடையும்போது மாத்திரமே வீரியமாக நெற்பயிர்கள் வளர்ச்சியடைந்து பதர் இல்லாத நெல்மணிகளை விளைச்சலாக தரும் என்பதே பல விவசாயிகளின் நெற்செய்கை அனுபவம்.

திரவம் மூலம் நைதரசன் கலவையை விசுறுவதால் நெல் ஓலைகளில் மட்டும் உறிஞ்சி பச்சையாக நெல்வயல்கள் காட்சியளிக்குமே அன்றி நெல்மணிகள் நிறைவாக விருத்தியடையாது என்பதை விவசாயிகள் பரீட்சார்த்தமாக கூறுவதில் உண்மையுள்ளது.

உண்மையில் சேதனப் பசளை பாவிப்பதன் நோக்கம் நஞ்சற்ற உணவுகளை மக்கள் உண்ண வேண்டும் என்பதே. அப்படியானால் ஏன் சோளன் பயிருக்காக என போலி விளம்பரம் கொடுத்து ஐயாயிரம் மெற்றிக்தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்ய வேண்டும். சோளன் பயிர்ச் செய்கை என்ற போர்வையில் இந்த யூரியா உரத்தை நெல் வயல்களுக்கு விவசாயிகள் பாவிக்கமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தவாதம் உண்டு.

உண்மையில் விவசாயிகளை முட்டாள்கள் என இந்த அரசாங்கம் நினைப்பதாகவே எண்ணம் தோன்றுகிறது ஆனால் விவசாயிகள் முட்டாள்கள் இல்லை இந்த அரசாங்கம் முட்டாள் என்பதை இன்னும் மூன்று மாதங்களுக்குள் இந்த அரசாங்கம் உணரப்போகிறது.

சேதனப் பசளை மூலம் ஒரு ஏக்கருக்கு 20, மூடைகளை விடவும் குறைவான விளைச்சலே பெரும்போக நெற்செய்கையில் பெற முடியும். ஆனால் இரசாயன உரம் மூலம் ஏக்கருக்கு 40 தொடக்கம் 45, மூடைகள் விளைச்சலாகப் பெறமுடியும். இந்த உண்மையை அரசு மறுக்க முடியாது.

தற்போது இலங்கை முழுவதும் விவசாயிகள் அரசுக்கு எதிராக பல போராட்டங்களை நடத்தும் நிலையில், உண்மையாக மக்கள் மீது அக்கறை இருக்குமாயின் சோளன் செய்கைக்கு என ஒரு சாட்டைக் கூறி இறக்குமதி செய்யும் 5000, மெற்றிக்தொன் யூரியா உரத்தை நெற்செய்கைக்கு வழங்கியாக வேண்டும் எனவும் மேலும் கூறினார்.

# எனக்கும், எனது குடும்பத்துக்கும் ஏற்பட்ட அநியாயம் எந்தவொரு அரசியல்வாதிக்கும் வந்துவிடக் கூடாது

**(ந.குகதர்சன்)**

எனக்கும், எனது குடும்பத்துக்கும் ஏற்பட்ட அநியாயம் இனிவரும் காலங்களின் சிறுபான்மை சமூகத்தின் எந்தவொரு தலைமைக்கும், எந்தவொரு அரசியல்வாதிக்கும் வந்துவிடக் கூடாது என்பதை பிரார்த்தனையில் கேட்டுக் கொண்டேன் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பனருமான றிஷாத் பதுர்தீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதுர்தீன் ஆறு மாத கால சிறைப்படுத்தலின் பின்னர் நாடளாவிய ரீதியில் தனது ஆதரவாளர்கள், கட்சித் தொண்டர்கள் ஆகியோரை சந்தித்து வரும் நிலையில் ஓட்டமாவடியில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியில் இல்லத்தில் மக்கள் சந்திப்பு இடம்பெற்ற போது மேற்சொன்னவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; ஒரு இனவாதியாக கடந்த காலங்களில் ஊடகங்களில் காட்டப்பட்ட பொழுது எங்களை பல சந்தேக பார்வையோடு காட்டுவதற்கான பல சதிகளை பல ஊடகங்கள் திட்டமிட்டு செய்தது. குண்டு வெடித்த தினத்தில் இருந்து சில ஊடகங்கள் குண்டு தாக்குதலோடு எங்களை சம்பந்தப்படுத்தி பொய்யான செய்திகளை வெளியிட்டு வந்ததை நாட்டு மக்கள அறிவார்கள்.

எந்த பயங்கரவாதத்தோடும் அனுவலவும் சம்பந்தமில்லாதவர்கள் நாங்கள். இந்த விடயத்தினை தெளிவாக சொன்னோம். கட்நத நல்லாட்சியில் விசாரணை நடந்த பொழுது அமைச்சு பதவயை விலகுமாறு அத்துரலிய ரத்னதேரர் உண்ணாவிரதம் இருக்க அவர் மரணித்து விடுவார் விலகுங்கள் என்று பல அழுத்தங்கள் கொடுக்க அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் பதவி விலகி நியாயமான விசாரணைக்கு வழி கொடுத்தோம்.

கடந்த பாராளுமன்ற தேர்தல் நடந்து கொண்டிருந்த பொழுது என்னை மூன்று முறை அழைத்து புலனாய்வினர் விசாரித்



தார்கள். ஆனால் உண்மையான பதிலை வழங்கிய பொழுதும் சாதாரண நபருக்கு நடக்கூடாத அளவுக்கு அநீதி இழைக்கப்பட்டவனாக எனது மனைவி பிள்ளைகள் உறங்கிய அறைக்குள் பலவந்தமாக வந்தார்கள். எனது கதவு மூடிக் காணப்பட்ட நிலையில் மதிலால் பாய்ந்து உள்ளே வந்தார்கள்.

ஒரு பெரிய மாபியா தலைவரை கைது செய்வது போன்று நடந்து கொண்டார்கள். அதன் பின்னர் ஆறு மாதம் சிறையில் இருந்தேன். இந்த நிலைமை யாருக்கும் நடந்து விடக்கூடாது என்ற நோக்கத்திற்காக கடந்த காலங்களில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரையும் பயங்கரவாத தடுப்பு சட்டத்திற்கு கீழே கைது செய்த வரலாறு கிடையாது.

பயங்கரவாத தடுப்பு சட்டம் என்பது மிகவும் ஆபத்தான சட்டம் இந்த சட்டத்தினை நீங்குமாறு உலகமே பேசிக் கொண்டிருக்கின்றது. ஜீஎஸ்பிளஸ்ஸை நிறுத்துவோம் என்று ஐரோப்பிய ஒன்றியம் பேசிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான மோசமான சட்டத்தின் கீழ் நான் கைது செய்யப்பட்டேன்.

எதிர்காலத்தில் சிறுபான்மை சமூகத்தின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், பாதுகாப்பு, இருப்பு, காணி பிரச்சனைகள் போன்று பல பிரச்சனைகள் இருக்கின்றது. இவற்றுக்காகத்தான் நாங்கள் அரசியல் செய்கின்றோம் என்றார். தேசிய காங்கிரஸ் முன்னாள் கல்முனை நகரசபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.றிபாஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் உத்தியோக பூர்வமாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதுர்;தீன் மற்றும் கட்சியின் தவிசாளர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி ஆகியோர் முன்னிலையில் இணைந்து கொண்டார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தலைமையில் நடைபெற்ற குறித்த மக்கள் சந்திப்பில் முன்னாள் பிரதி அமைச்சர் எஸ்.கணேசமூர்த்தி, ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர், முன்னாள் தவிசாளர்களான ஐ.ரி.அஸ்மி, கே.பி.எஸ்.ஹமீட், பிரதி தவிசாளர் எம்.அமீர், பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் கல்முனை நகரசபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.றிபாஸ், வவுனியா மௌலவி முனாஜித், அக்கறைப்பற்று ஹனிபா மதனி, கல்குடாத் தொகுதி முஸ்லிம் பிரதேச ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணிக்கு கட்சியின் பொருளாளர் கலீலுர் ரஹ்மான் நியமிக்கப்பட்டமைக்கும் ஐக்கிய சமாதான கூட்டமைப்புக்கும் தொடர்பில்லை

**(மாளிகைக்காடு நிருபர்)**

'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணிக்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவில் நியமிக்கப்பட்டிருக்கும் எங்கள் கட்சியின் பொருளாளர் ஐ.ஏ. கலீலுர் ரஹ்மானின் நியமனம் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் சிபாரிசில் இடம்பெற்ற ஒன்றல்ல. இவரின் நியமனத்தின் பின்னணியில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தூண்டுதல்கள் எதுவுமில்லை. கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளின் போது முன்னிலை போராட்டக்காரராக தன்னை நிரூபித்து ஆர்ப்பாட்டங்களில், போராட்டங்களில், சமூக நலன் பேணும் நிகழ்வு



களில் கலந்துகொண்ட சமூக அக்கறை கொண்ட ஒருவராக இருந்ததன் பயனாக ஐ.ஏ. கலீலுர் ரஹ்மானுக்கு இந்த நியமனம் கிட்டியுள்ளது என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர் மௌலவி ஐ.எம்.எம். மிப்ளால் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அந்த அறிக்கையில்,

நிறைய சமூக சேவை அமைப்புக்களின் தொடர்புகளை கொண்ட அவர் சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் நிறைய விடயங்களை அறிந்த அனுபவமிக்கவர். அவரது விருப்பத்தின் பிரகாரம் அவர் இந்த நியமனத்தை பெற்றுக்கொண்டுள்ளார். அதனை தொடர்ந்து வழமை போன்று இந்த நியமனமும் விமர்சனத்தை இப்போது சந்தித்துள்ளது. ஒருசிலர் இவரது நியமனத்தை விமர்சித்துக் கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு இந்த நியமனம் தொடர்பில் மறுபரிசீலனை செய்யுமாறும் இந்த செயலணியின் மூலம் சமூகத்திற்கு ஏற்படப் போகும் சாதக, பாதக நிலைகளை ஆராயுமாறும், நன்மை தீமைகளை நன்றாக விளங்கி நடக்குமாறும் எங்கள் கட்சியின் பொருளாளர் ஐ.ஏ. கலீலுர் ரஹ்மானிடம் அறிவுறுத்தியுள்ளோம். மிக நீண்டகாலமாக சமூக இன்னல்களுக்காக பேசிக்கொண்டும், போராடிக் கொண்டும் இருக்கும் இவரின் முடிவு இந்த விவகாரத்தில் பிழையானதாக அமையாது என்று நம்புகிறோம். அந்த செயலணி இன்னும் ஒன்று கூடவுமில்லை, செயற்பாடுகள் இன்னும் ஆரம்பிக்கவுமில்லை. அந்த செயலணியின் தொழிற்பாடு ஆரம்பித்த பின்னரே இது தொடர்பில் தீர்க்கமான முடிவை எடுக்க முடியும் எனும் நிலைப்பாட்டில் அவர் உள்ளதாக அறிகிறோம்.

# நோயாளிகளுக்கு பொருட்கள் கையளிப்பு

**(ஏ.பி.எம்.அஸ்ஹர்)**

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குத் தேவையான ஒரு தொகுதி பொருட்களை பண்டாரவளை 98 ஏக்கர் ஹோட்டல் நிறுவனம் வழங்கியுள்ளது.

98 ஏக்கர் ஹோட்டல் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளரும் பிரபல தொழிலதிபருமான சம்மாந்துறையைச்சேர்ந்த ஏ.ஆர்.இன்திகாப் அலாம் இப்பொருட்களை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் அஸாத் எம் ஹனிபாவிடம் கையளித்தார் இந்நிகழ்வில் இன்திகாப் அலாமின் தந்தை உட்பட வைத்தியர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.



# முகம் கழுவும் நீர் தொகுதி கையளிப்பு





**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**

கோவிட் 19 நிலைமையை கருத்தில் கொண்டு சுகாதார நலன் பேணி கருதி பள்ளிவாயலில் வுழு செய்யக்கூடிய நீர் தொகுதி கையளிக்கப்பட்டது.

சீனக்குடா ஆலிம் அப்பா பள்ளிவாயல் நிர்வாகத்தின் வேண்டுகோளிக்கினாங்க திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை கௌரவ உபதவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது.

பள்ளிவாயல் நிர்வாகத்தினரினால் கோவிட் 19 கருத்திட்கொண்டு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உபதவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் அவர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டத்தினை அடுத்து கடந்த காலத்தில் நேரில் சென்று பார்வையிட்டதுடன் நிர்வாகத்தினரிடம் வாக்குறுதியளித்த நிலையில்

அல் ஹித்மத்துல் உம்மாஹ் அமைப்பின் அனுசரணையுடன் வுழு செய்யும் தளம் அமைக்கப்பட்டு அல் ஹித்மத்துல் உம்மாஹ் அமைப்பின் பணிப்பாளர் பாத்திஹ் ஹஸ்ஸாலி அவர்களின் பங்கேற்புடன் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரதம பாதுகாப்பு அதிகாரி மர்ஹும் எம்.ஐ.ஜூனைதீன் பத்தாவது ஆண்டு நிறைவு தினம்

(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

மட்டக்களப்பு மாவட்டத்தின வாழைச்சேனையை சேர்ந்த முகம்மது இப்ராஹீம் ஆசியா உம்மாவின் 8வது பிள்ளையாக 1963ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி ஜூனைதீன பிறந்தார்.

வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய இவர் கல்முனை ஸாஹிறாக் கல்லூரி மற்றும் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையிலும் உயர் கல்வியைத் தொடர்ந்தார்.

சிறுவயதில் கல்வி, விளையாட்டு ஆகியவற்றில் அதி திறமையை வெளிக்காட்டியதன் பயனாக மாவட்ட, மாகாண மட்டங்களில் நடைபெற்ற பலபோட்டி நிகழ்வுகளில் தனது திறமைகளைக் காட்டி பல சாதனைகளை நிலை நாட்டியதுடன் பரிசில்களையும் ஈட்டியுள்ளார்.

பாடசாலை காலத்தில் பல நிறுவனங்கள், அமைப்புக்களில் அங்கத்துவம் பெற்று பயிற்சி நெறிகளின் மூலம் பல அனுபவங்களைப் பெற்ற ஜூனைதீன் பாடசாலை கல்வியை தொடர்ந்து வாழைச்சேனை முஸ்லிம் பிரதேசத்தில் பல்வேறு வகையான விளையாட்டுக்களில் திறமையுடைய இளைஞர்கள் காணப்பட்டபோதிலும் விளையாட்டுக் கழகங்கள் இல்லாத குறையை உணர்ந்து சக நண்பர்களுடன் இணைந்து தற்போதைய அல் - அக்ஸா விளையாட்டுக் கழகத்தை றோல் ரோய்ஸ் என்ற பெயரில் 1983.06.30ம் திகதி உருவாக்கினார் அந்த கழகமே நாட்போக்கில் அல் - அக்ஸா என்று பெயர் மாற்றப்பட்டது.

எமது விளையாட்டக் கழகம் தேசியரீதியில் பல சாதனைகளை நிலை நாட்டவேண்டும், எமது இளைஞர்களது பெயரும் எமது பிரதேசத்தின் பெயரும் பேசப்படவேண்டும் என தனது கழகம் ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து அதற்காக மிகவும் உழைத்தார். இதற்காக தனது சொந்த நிதி மூலம் கழகத்தின் சகல பணிகளையும் முன்னெடுத்தார். இதன் பயனாக அல் - அக்ஸா விளையாட்டுக் கழகம் கிழக்கு மாகாணத்தில் பெயர் சொல்லும் அளவுக்கு நடந்த விளையாட்டு சுற்றுத் தொடர்களில் வெற்றியீட்டி சாதனைபடைத்தது.

தகப்பனார் போன்று இவரும் சமகாலத்தில் பிரதேச கல்வி, கலை, கலாச்சார, சமூகசேவை மேம்பாட்டில் அக்கறை கொண்டு அல்ஹாஜ் எல்.டீ.எம். இஸ்ஹாக் மௌலவியுடன் இணைந்து கல்குடா கல்வி, கலை, கலாச்சார பேரவையை நிறுவி ஸ்தாபக பொதுச் செயலாளராக பொறுப்பேற்று மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக நூல் நிலையம், சனசமூக நிலையங்களைத் தோற்றுவித்து பல செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

தமிழ், முஸ்லிம் இளைஞர்களிடம் மிக அன்னியோன்யமாகப் பழகக் கூடியவராக காணப்பட்டதால் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவராக 1984ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். முஸ்லிம்கள் மத்தியில் தேசிய ரீதியில் பிரபல்யம் அடைந்த வை.எம்.எம்.ஏ. யின் கல்குடாக் கிளையின் செயலாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு சட்டத்தரணி எம்.எஸ்.ஏ. நவாஸோடு இணைந்து பல்வேறு பட்ட சமூக சேவையில் ஈடுபட்டு வறிய குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டத்தை அமைத்துக் கொடுத்தார்கள்.

எதிர் காலத்தில் தானொரு சிறந்த விளையாட்டு உத்தியோகத்தர் அல்லது பொதுச் சுகாதாரஅலுவலராக வரவேண்டும் என்பதே இவரின் ஆசையும் எதிர்பார்ப்புமாக இருந்தது. இதற்காக பல்வேறு பட்ட நேர்முகப் பரீட்சைகளில் தோற்றியும், அரசியல் செல்வாக்கின்மையால் பயன் கிடைக்கவில்லை. 1988 காலப்பகுதியில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அல்ஹாஜ் ரிஸ்வி சின்னலெப்பை அவர்களினால் முஸ்லிம் இளைஞர்கள் பொலிஸ் துறையில் உள்வாங்கப்பட வேண்டும் என்று அப்போதைய அரசாங்கத்திடம் வேண்டிக் கொண்டதன் பயனாக திறமைகொண்ட முஸ்லிம் இளைஞர்களை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ள பல முன்னெடுப்புக்களை எடுத்த வேளையில் மர்ஹும் ஜூனைத் அவர்களின் ஆசிரியரான யூ.அஹமட் (ஓய்வுபெற்றஅதிபர்) அவர்களின் ஆலோசனைக்கமைய பொலிஸ் சேவையில் 1998.08.21ம் திகதி உப பொலிஸ் பரிசோதகராக (எஸ்.ஐ) கடமையேற்றார்.



ஏறாவூர், மட்டக்களப்பு, பாணந்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களில் கடமை புரிந்தார். வட கிழக்கு மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களை விடுதலைப் புலிகள் 1990ம் ஆண்டு முற்றுகையிட்ட வேளையில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்த இவர் சமயோசிதமாக உயிர் தப்பி பின்னர் பெந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய வேளையில் தென் மாகாண ஆளுநராக இருந்த அல்ஹாஜ் பாக்கீர் மாக்காரின் பாதுகாப்பு பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

அதே போன்று மேல் மாகாண சபையின் ஆளுநர் அஷ்ஷெய்க் அலவி மௌலானாவின் பாதுகாப்புப் பொறுப்பாளராகவும் கடமைபுரிந்தார். பின்னர் கொஸ்கொட, அம்பலாங்கொட, வலப்பிட்டி பொலிஸ் காவல் நிலையங்களில் பணியாற்றிய வேளையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடாத் தொகுதி முஸ்லிம்கள் வரலாற்றில் காலம் தொட்டு முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதி இல்லாத வேளையில் முதன் முதலில் 2000ம் ஆண்டு பெற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான எம்.பி.முஹைதீன் அப்துல் காதருக்கு அமைச்சுப் பாதுகாப்பு வழங்கப்பட்ட வேளையில் தனது மண்ணின் மைந்தனைப் பாதுகாக்கும் பொறுப்பினை அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினூடாக (எம்.எஸ்.டி) இணைந்து கொண்டார். பிரதியமைச்சரின் மரணம் 2004ம் ஆண்டு வரை வரைபாதுகாப்புப் பொறுப்பாளராக இருந்து வந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாவது பொலிஸ் பரிசோதகராக (ஐ.பி.) தெரிவு செய்யப்பட்டு தொடர்ந்து அமைச்சு பாதுகாப்புப் பிரிவில் கடமைபுரிந்தார். சமூகசெயற்பாட்டில் 1983 - 1988 வரை அல் - அக்ஸா விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகத் தலைமையேற்ற இவர் பின்னர் தொழில் நிமித்தம் தலைமைப் பொறுப்பை சக அங்கத்தவர்களுக்கு வழங்கி ஸ்தாபகராகவும், போசகராகவும் இருந்து வழிகாட்டி வந்தார். தனது திருமண பந்தத்தை களுத்துறை மாவட்ட வெளிப்பன்னையில் முகம்மது தம்பி பாத்திமா றுமையா ஆசிரியையுடன் திருமணம் செய்து நான்குபிள்ளைகளின் தகப்பனாகவும் வெளிப்பன்னை மக்களுக்கும் சேவைசெய்யும் நோக்கில் வெளிப்பன்னை வை.எம்.எம்.ஏ யின் பிரதித் தலைவராகவும் இருந்து பல சமூக சேவைப் பணிகளை முன்னெடுத்துச் சென்றார்.

இவர் பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இவரின் ஒவ்வொரு பணியும் அமைந்திருந்தது. அது மாத்திரமல்லாமல் தனது அரசியல் செயற்பாட்டை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து அதன் தலைவர் அல்ஹாஜ் எம்.எச்.எம்.அஸ்ரபுடன்; கை கோர்த்து அவரின் மரணம் வரை தொடர்ந்தார்.

சிறு வயது முதல் மார்க்கத்தையும் உலமாக்களையும் கண்ணியமாக மதிக்கக்கூடியவராகவும் தாய், தந்தை, சொந்த பந்தங்களுடனும் நண்பர்கள் வட்டத்துடனும் சினேகமாக பழகக்கூடியவராகவும் காணப்பட்டார். எப்போதும் ஊரின் முன்னேற்றம் குறித்துப் பேசக் கூடியவராகவும் பிறந்த மண்ணின் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்து வருகின்ற கோறளைப்பற்று மத்தி பிரதேச சபையைப் பெற்றுக் கொள்ள தன்னால் இயன்ற முன்னெடுப்புக்களை எடுத்துள்ளார்.

மேலும் தனது அமைச்சு பாதுகாப்புப் பிரிவின் (எம்.எஸ்.டி.) ஊடாக அப்போது பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சராக இருந்த அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வரின் பாதுகாப்பு அதிகாரியாகவும் பின்னர் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான எம். மஹ்ரூப் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு பாதுகாப்புப் பொறுப்பாளராகவும் கடமையாற்றியதுடன்; தனது மரணம் வரைக்குமான காலம் வரை மக்கள் மக்கள் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான அல்ஹாஜ் ரிஷாட் பதியுதீனின் அமைச்சுப் பாதுகாப்பு பிரதம பொறுப்பாளராக ஆறு வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

இறுதி நேரத்தில் பொலிஸ் பரிசோதகருக்குரிய (சி.ஐ.பி.) அனைத்துதகைமைகளையும் பெற்று பதவி பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் அன்னார் குடும்பத்தினரையும், நண்பர்களையும் சொல்லொனாத் துயரத்தில் ஆழ்த்தி 2012.11.08ம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்து மாரடைப்பு நோயினால் எம்மை விட்டுப் பிரிந்தார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அன்னாரது இழப்பு குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது இப்பிரதேசத்திற்கும் பேரிழப்பாகும் அன்னாரது பணிகளை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக ஆமீன்!

இவருடைய சமூக செயற்பாட்டை பாராட்டி இவரின் நினைவாக பிரதேச சபை மற்றும் சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து 2014ம் ஆண்டில் வாழைச்சேனை 5ம் வட்டார பிரதான வீதிக்கு ஐ.பி.ஜூனைதீன் மாவத்தை என்று பெயர் சூட்டி இவரை கௌரவித்துள்ளது.

## கிழக்கு ஆளுனரால் தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு





(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பரமும்புர விகாரையில் தென்னங்கன்றுகள் வழங்கும் வைபவம் இடம் பெற்றது.

தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் நெறியாள் கையின் கீழ் நேற்று(09). இடம் பெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் அநுராதா யஹம்பத் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தலைமை வகித்தார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு சௌபாக்யா கொள்கை பிரகடனத்துக்கு அமைய தென்னங்கன்றுகள் இதன் போது சுமார் 458 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது .நஞ்சற்ற உணவு உற்பத்தியின் மூலமாக இயற்கை பசளையை பயன்படுத்துவதன் ஊடாக தேங்காய் தட்டுப்பாட்டை இதனால் நீக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது . ஒவ்வொரு வீடுகளிலும் தலா பத்து தென்னை மரங்களை நட்டு அதன் ஊடாக பயனடையவும் செய்கை தேங்காய் பால் பாவனையை தடுத்து இயற்கை தேங்காயை அதிகமாக பயன்படுத்துவதன் ஊடாக ஆரோக்கியமான உணவு பழக்கத்தை இதனால் கடைப் பிடிக்க முடியும் என கிழக்கு மாகாண ஆளுனர் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி ஸ்ரீபதி,தம்பலகாமம் பிரதேசசபை தவிசாளர் ஏ.ஜீ.சம்பிக்க பண்டார, தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர், உள்ளூர் அரசியல் வாதிகள்,அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஒரு இலட்சம் வேலை வாய்ப்பில் மாற்றுத் திறனாளிகள் புறக்கணிப்பு

(வடமலை ராஜ்குமார்)

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலை வாய்ப்பில் மாற்றுத்திறனாளிகள் உள்வாங்கப்படாததை இட்டு வெருகல் கதிரவன் மாற்றுத் திறனாளிகள் அமைப்பு மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பண்டிக்கொரலா அவர்களுக்கு பிரதேச செயலாளர் ஊடாக மகஜர் ஒன்றினை கையளித்தனர்.



இம் மகஜரை கதிரவன் மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் தலைவர் ஜெ.கோவிந்தினி மற்றும் செயலாளர் சி.குபேந்திரன் ஆகியோர் கையளித்தனர்.

அம் மகஜரில் பின்வருமாறு அமைந்திருந்தது.

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டமானது அதற்கான தாங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ள இலக்குக் குழுவும் மிகவும் சிறந்தது என நாம் கருதுகின்றோம். அதற்காக இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் இன்றைய ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஜனாதிபதி அவர்களுக்கும் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியான தங்களுக்கும் முதற் கண் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் மாற்றுத்திறனாளின் உரிமையான (1998 பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 27/88 ஒகஸ்ட் 18 - 1988 பொதுத்துறையில் வெற்றிடங்களை நிரப்பும் போது மாற்றுத்திறனாளிகளுக்கு 3% வேலை வாய்ப்பை வழங்குதல்) அடிப்படையில் வெருகல் பிரதேசத்தில் வழங்கப்பட்ட இரண்டாம் கட்ட வேலை வாய்ப்பில் மாற்றுத்திறனாளிகள் எவரும் உள்வாங்கப்படவில்லை. மேலும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் 13 பேர் விண்ணப்பித்து நேர்முகத் தேர்வுக்கு தோற்றிய போதிலும் அதில் ஒருவர் கூட தொழில் வாய்ப்புக்காக தெரிவு செய்யப்படாததையிட்டு நாம் மிகவும் கவலையடைகின்றோம்.

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் அதிகமான மாற்றுத் திறனாளிகள் வாழ்ந்து வருவதோடு அவர்களில் 90 சத வீதமானவர்கள் நிரந்தர வருமானம் இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

எனவே இவ் வேலை வாய்ப்புத் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளை உள்வாங்கி எமது உரிமையான 3% தொழில் வாய்ப்பினை வழங்கி எமது தொழில் உரிமையை உறுதி செய்யுமாறு கோருகின்றனர் இம் மகஜரின் பிரதிகளை கிழக்கு மாகாண ஆளுனர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கபில அதுகோரல மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மதச்சாட்சியைவிடவும் மனச்சாட்சியே முக்கியமானதாகும்

(ஏ.பி.எம்.அஸ்ஹர்)

மதச் சாட்சியை விடவும் மனச்சாட்சியே முக்கியமானதாகும் என முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.


இலங்கை பொதுநலவாய சட்டத்தை அடிப்படையாக கொண்ட ஒரு நாடு. பிற்காலத்தில், இலங்கை குடியரசானதும் தேவைக்கேற்ப சில சட்டங்கள் மறுசீரமைக்கப் பட்டன.

எவ்வாறிருப்பினும் இச்சட்டங்களின் அடிப்படையானது உரோம/ ஒல்லாந்த (R-DL) சட்டப் பின்னணியிலும், பிரித்தானிய சட்டப் பின்னணியிலும் இருந்தே வகுத்து எடுக்கப்பட்டன.

பிரித்தானிய சட்ட உருவாக்கத்தை ஆழ்ந்து நோக்குகையில், அவற்றில் பெரும்பாலானவை மதுபான சாலைகளில் (Taverns) ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்க்க மத்தியஸ்தத்தின் ஊடாக கொடுக்கப்பட்ட தீர்வுகளின் திரிபுகளாகவே கொள்ளப்படுகின்றன.

சட்ட ஆய்வுகள் இவற்றையே பின்னணியாக வெளிப்படுத்துகின்றன.

சட்டத்திருத்தம்காலத்துக்கு காலம் அவசியமானதுதான். ஆயினும்; சட்டவாக்கமோ, திருத்தமோ மக்கள் பிரதிநிதிகளால் செய்யப்படும் விடயம் மட்டுமல்ல; அது மக்களின் நடைமுறை வாழ்க்கையோடும், நம்பிக்கைகளோடும் ஒன்றிணைந்து செல்லக்கூடியதாக அமைவதை பிரதிநிதிகள் உறுதி செய்யவும் வேண்டும். ''மக்களுக்காக சட்டமே அன்றி; சட்டத்துக்காக மக்களல்ல'' சமகாலத் தேவைகளைக் கொண்டு



உருவாக்கப்படும் சட்டங்கள் நாட்டினதும் அதில் வாழும் பல்லின சமூகங்களினதும் நலன் கருதி உருவாக்கப்பட வேண்டுமே அன்றி வெறுப்புக்கும் காழ்ப்புணர்ச்சிக்கும் வித்திடக்கூடாது.

சட்டங்களை உருவாக்கி சமூகங்களை உரசவிடும் ஏற்பாடுகளை தேடக்கூடாது. ஆட்களின் பல அடிப்படைகளிலான தொகுதிகளே சமூகங்களாகும். ஆட்களின் உறவுகளும் ஊடாட்டங்களுமே வாழ்க்கை என்பதால்; எந்த நாட்டிலாயினும் மதங்களையல்ல, புனிதமான மனித்தத்தை மதித்தே சட்டங்களின் உருவாக்கமோ, திருத்தமோ செய்யப்படல் வேண்டும்.

## விவசாயிகளுக்கு தானிய விதைகள் வழங்கி வைப்பு

(ரக்ஸனா)

விவசாயத்திணைக்களமும், நீர்ப்பாசனத்திணைக்களமும் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தும் பிசிப் திட்டத்தின் கீழ் நிலக்கடலை, மற்றும் கௌபி விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி வைக்கும் நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை(09) மட்டக்களப்பு மாவட்டத்தின் பாலையடிவட்டை மற்றும் கற்சேனை ஆகிய இடங்களில் இடம்பெற்றன.

இதன்போது விவசாயத்திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய ப.பணிப்பாளர் பேரின்பராசா, மட்டக்களப்பு தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் த.மேகராசா, தொழில் நுட்ப உத்தியோகஸ்த்தர் சடிசாரா, மற்றும் மாதவன், பாடவிதான உத்தியோகஸ்த்தர், நீர்ப்பாசனகள உத்தியோகஸ்த்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



பாலையடிவட்டையில் 50 விவசாயிகளுக்கும், நிலக்கடலை 32 ஏக்கரிலும், கௌபி 22 ஏக்கரிலும், கற்சேனையில் 30 விவசாயிகளுக்கும், நிலக்கடலை 8 ஏக்கரிலும், கௌபி 4 ஏக்கரிலும், செய்கை பண்ணுவதற்கு இதன்போது தானிய விதைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.